தமிழ் வாழ்க

# தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : ௫௬    மலர் : ௰௨

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: உ௲௰௪, – துந்துபி பங்குனி
(1983 மார்ச்சு—ஏப்பிரல்)

ந-2737

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௬] [மலர்: ௰௨

உள்ளுறை:

1) பாரதியாரின் பாடல் ஒன்று—ஆய்வு ... 529
அடிகளாசிரியர், சிறப்புநிலை இணைப்பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

2) கலைக்கடல் வாழ்க்கை விளக்கம் .. 536
டாக்டர். இர. குழந்தைவேலு, எம். ஏ., பி. எச். டி.,

3) சொல்லாய்வில் புதிய கண்டுபிடிப்புகள் ... 538
புலவர். ந இராசகோபாலன்,
எம். ஏ., பி. லிப்., டிப்., ஃபிரஞ்சு,

4) பாஞ்சாலி சபதம்—ஆய்வு .. 543
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

5) கரந்தைத் தமிழ்ச்சங்க விழாக்கள் .. 554

6) வரலாற்று நாவல் உலகில்
கல்கி பெறும் இடம் ... 559
ஆ. இளங்கோவன், பி. லிட்.,

7) ஆந்திர நாட்டு அகநானூறு—ஓர் ஒப்பாய்வு 567
டாக்டர். சரளா ராசகோபாலன், எம். ஏ., பி. எஃசி.,

T-UN-428


# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உஅமச | மலர் |
|---|---|---|
| ருசு | துந்துபி—பங்குனி | மஉ |
| | 1983 மார்ச்சு—ஏப்பிரல் | |


தமிழ் வாழ்க

## பாரதியாரின் பாடல் ஒன்று — ஆய்வு


திரு அடிகளாசிரியர்

சிறப்புநிலை இணைப்பேராசிரியர்


### தோற்றுவாய்:

பாரதியார் புதுவை நகரத்தில் தங்கியிருந்த பொழுது அவர் மனம் அமைதியை விரும்பும். அதற்காக அவர் நகரத்திற்கு வெளியே சென்று உலாவியும் தங்கியும் பலவகை இயற்கைக் காட்சி முதலியவற்றைக் கண்டு வருவார்.

உலக மக்கள் இக்காலத்தில் திரைப்படக் காட்சியைக் கண்டு களிப்பதற்கு ஓடுவதைப் போல இவர் அமைதி தராத புதுவை நகரத்தை விட்டு அதற்குப் புறம்பேயுள்ள சாலை, சோலை, வயற்புறம், கடற்புறம் முதலிய இடங்கட்குச் சென்று அங்குள்ள இயற்கைக் காட்சி முதலானவற்றைக் கண்டு அமைதிபெற்று அகமகிழ்ச்சியடைவார். 'அவர் அவ்விடங்களில் கண்ட காட்சியிலிருந்து தாம் பாடுகின்ற பாட்டிற்கேற்ற பாடுபொருளாகிய உரிப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு அப்பொருளைப் பாடலில் அழகாக அமைத்துக் கொள்வார்.'

### அவர் கண்ட தீப்வொளி:

புதுவை நகரத்தை அடுத்த கிராமப் பகுதியொன்றில் தென்னை மரச் சோலைக்குள் 'சித்தாந்த சாமி திருக்கோயில்' என்பது இருக்கின்றது. பாரதியார் அங்கு அடிக்கடி சென்று தங்குவார். அத் திருக்கோயில் வாயிலில் இரவு பகல் எந்த நேரத்திலும் எரிந்து கொண்டிருக்கும்படி நந்தா விளக்கொன்று வைக்கப்பட்டிருந்தது.

பாரதியார் அத்தீபவொளியை அடிக்கடி பார்ப்பார். 'அத்தீப வொளி உலக மக்களுக்கு நல்ல கருத்துக்களை உணர்த்துவதாகக் கருதினார்.' அக் கருத்தினைச்

''சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீபவொளி''

என்ற தலைப்பில் பாட்டாக எழுதினார். மேற்கண்ட தலைப்பில் இருக்க வேண்டிய பாட்டு இப்பொழுது 'சித்தாந்த சாமி கோயில்' என்ற தலைப்பில் உள்ளது.

பாரதியார் பாடல்களைத் திரட்டிப் பெரிதும் சிறிதுமாகப் பல வடிவத்தில் பல பதிப்புக்கள் இதுவரை வெளியாகியுள்ளன. 'அப் பதிப்புக்களெல்லாம் திருத்தமான ஆராய்ச்சிப் பதிப்பாக இல்லை என்பது என் கருத்தாகும். அங்கங்கே களைய வேண்டிய பல பிழைகள் உள்ளன. அவையெல்லாம் திருந்த வேண்டும்.' எடுத்துக் காட்டாகச் 'சித்தாந்த சாமி திருக்கோயில்' என்ற தலைப்பில் உள்ள பாடலைப் பார்ப்போம். அப்பாட்டினைப் படித்துப் பார்த்தால் ''சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீப வொளி'' என்ற தலைப்பில் அப்பாடலின் தலைப்பு இருக்கவேண்டும். அப்பாடலின் இப்பொழுதுள்ள வடிவம்

1. சித்தாந்தச் சாமி திருக்கோயில் வாயிலில்
தீப வொளியுண்டாம்—பெண்ணே
முத்தாந்த வீதி முழுதையும் காட்டிய
மூண்ட திருச்சுடராம்—பெண்ணே

2. உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்ட வருஞ்சுடராம்—பெண்ணே
கள்ளத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ்சுடராம்—பெண்ணே

3. தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பது
தோற்ற முறுஞ்சுடராம்—பெண்ணே
மூன்று வகைப்படுங் காலம்நன் றென்பதை
முன்ன ரிடுஞ்சுடராம்—பெண்ணே

4. பட்டினந் தன்னிலும் பார்க்கநன் றென்பதைப்
பார்க்க வொளிர்சுடராம்—பெண்ணே
கட்டு மனையிலுங் கோயில்நன் றென்பதைக்
காண வொளிர்சுடராம்—பெண்ணே

என்பதாகும். இப்பாடலில் கீழ்க்கோடிட்ட இடங்களெல்லாம் திருந்த வேண்டிய இடங்களாகும். மேலும் பாட்டின் அமைப்பையே மாற்றி அமைக்க வேண்டும்.

அறிஞர் நன்கு கருதுக:

அ) முன்னர் இப்பாட்டின் தலைப்பு, ''சித்தாந்த சாமி திருக் கோயில் வாயில் தீபவொளி'' என்றிருக்க வேண்டும்.

ஆ) பாரதியார் அத்தீபவொளி நமக்குப் பல உண்மைகளைக் காட்டுகின்றது என்று தொடங்கி, அவ்வொளி காட்டுவனவற்றைக் குறித்துப் பாடுகிறார்.

இ) 'சொல் முடிவு' என்பது எல்லா அறிஞர்க்கும் உரிய பொது இலக்கணமாகும். அம்முடிவில் மாறுபட்டு அறிஞர் பாட்டிசைப்ப தில்லை,

ஈ) சித்தாந்த சாமி திருக்கோயில் வாயிலில் தீபவொளியுண் டாம்; அது முத்தாந்த வீதி முழுதையும் காட்டிட மூண்ட திருச்சுட ராம் பெண்ணே;'' என்று, பாரதியார் பாட்டைத் தொடங்குகிறார்.

உ) தொடங்கியவர் 'உள்ளத்து அழுக்கினையும் உடலிற் குறைகளையும் ஓட்ட வரும் சுடராம்' என்றும் கள்ளத் 'தனங்கள் அனைத்தும் வெளிப்படக் காட்டவரும் சுடராம்' என்றும் பாடு கிறார்.

ஊ) மேற்காட்டிய தொடர்களில் ஓட்ட வரும், காட்ட வரும் என்பன வினையெச்சந் தொடர்ந்த பெயரெச்சமாய்ச் சுடர் என்ற பெயருடன் முடிந்து நிற்கின்றன. ஏனைய கண்ணிகளும் இவ் வாறே முடிந்து நிற்க வேண்டும்.

எ) மேற்காட்டிய முறையில் அடுத்த கண்ணி

''தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பதைத்
தோற்ற உறுஞ்சுடராம் பெண்ணே!
மூன்று வகைப்படும் காலம்நன் றென்பதை
முன்ன இடுஞ்சுடராம் பெண்ணே''

என்ற பாடத்தில் இருத்தல் வேண்டும். அவ்வாறிருப்பின் தோற்ற உறும், முன்ன இடும் என்று வினையெச்சந் தொடர்த்த பெயரெச்ச மாய்ச் சுடர் பெயருடன் முடியும்.

ஏ) அடுத்த கண்ணி ''பட்டினந் தன்னிலும் பாக்கநன்று'' என்ற பாடத்தில் இப்பொழுதுள்ள தொடர் ''கருப்பனில் பொன் னன் நல்லன்'' என்றாற்போல ''பட்டினந் தன்னிலும் பாக்கம் நன்று'' என்று இருத்தல் வேண்டும். பட்டினம் என்பது கடற் கரை நகரமாகும். பாக்கம் என்பது கடற்கரைக் கிராமமாகும்

நகரத்தைக் காட்டிலும் கிராமம் நன்று என்பதையே பாரதியார் கருதியுள்ளார்.

ஐ) இப்பாடலை இயற்றமிழாகக் கருதினால் பெண்ணே என்ற விளிக்கு மூண்ட திருச்சுடராம் என்பன போன்ற சொற்களை முடி பாகக் கூட்டலாம். 'ஆனால் இசைத் தமிழிலே பெண்ணே என்ற விளிக்கு மூண்ட திருச்சுடராம் முதலிய சொற்களை மற்றொருமுறை திருப்பிச் சொன்னாற்றான் இசை முடிவு பெறும். இவ்வாறு முடி தலை இப்பாட்டினைப் போன்ற குதம்பைச் சித்தர் பாட்டாலும், இராமலிங்க சுவாமிகளுடைய'

''ஆணிப்பொன் அம்பலத்தே தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி அம்மா
அற்புதக் காட்சியடி''

என்னும் பாட்டாலும் உணர்ந்து கொள்ளலாம். குதம்பைச் சித்தர் பாடலில் பல்லவியில்லை. இராமலிங்க சுவாமி பாடலில் பல்லவி யும் சரணங்களும் உள்ளன.

ஒ) மேற்கூறியவற்றை யெல்லாம் கருதினால் பாரதியார் பாட்டு கீழ்க்கண்ட வடிவத்தில் அமைய வேண்டும்.

சித்தாந்த சாமி
திருக்கோயில் வாயில் தீபவொளி

1) சித்தாந்த சாமி திருக்கோயில் வாயிலில்
தீப வொளியுண்டாம்—பெண்ணே!
தீப வொளியுண்டாம்.

முத்தாந்த வீதி முழுதையும் காட்டிட
மூண்ட திருச்சுடராம்—பெண்ணே!
மூண்ட திருச்சுடராம்.

2) உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்ட வருஞ்சுடராம்—பெண்ணே!
ஓட்ட வருஞ்சுடராம்,

கள்ளத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ்சுடராம்—பெண்ணே!
காட்ட வருஞ்சுடராம்

3) தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பதைத்
தோற்ற உறுஞ்சுடராம்—பெண்ணே!
தோற்ற உறுஞ்சுடராம்

மூன்று வகைப்படும் காலம்நன் றென்பதை
முன்ன இடுஞ்சுடராம்—பெண்ணே!
முன்ன இடுஞ்சுடராம்

4) பட்டினந் தன்னிலும் பாக்கம் நன்றென்பதைப்
பார்க்க ஒளிர்சுடராம்—பெண்ணே!
பார்க்க ஒளிர்சுடராம்

கட்டு மனையிலும் கோயில்நன் றென்பதைக்
காண ஒளிர்சுடராம்—பெண்ணே!
காண ஒளிர் சுடராம்.''

இப்பாடலைப்
பற்றிய சில குறிப்பு:

1. 'தொல்காப்பியப் புறத்திணையியலில்' பாடாண் திணையில் வேலின் ஒக்கிய 'விளக்கு நிலை' என்றொரு துறைஉண்டு. அத்துறைவகையைச் சார்ந்தது இப்பாடல்.

2. 'புறப்பொருள் வெண்பாமாலையில்' பாடாண் படலத்துள் கூறப்பட்ட 'விளக்கு நிலை' என்ற துறை

''அளப்பருங் கடற்றானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று'' என்றும்

''அடரவிர் பைம்பூண் வேந்தன் றன்னைச்
சுடரொடு பொருவினு மத்துறை யாகும்''

என்றும் இரண்டு விதமாக வரும் என்பர்.

3. பாரதியார் கூறும் இவ்விளக்கு நிலைப் பாடல்கள் மக்களுக்குப் பல உண்மைப் பொருளை உணர்த்துகின்றன (விளக்குகின்றன )

4. உமாபதி சிவம் என்னும் ஞானாசிரியர் உயிர்கள் உலகப் பொருள்களை அறிவதற்கு இறைவன் அறிவு உபகாரப்பட அறிவித்து நிற்கும் நிலையை உணர்த்த, கண் ஒளியையும் விளக்கின் சோதியையும் உவமையாகக் கூறியுள்ளார். கண்ணொளி பொருள்களைக் காண வேண்டின் விளக்கொளி முற்பட இருந்து காட்ட வேண்டும்'. அஃதேபோல் உயிர் உணர்வதற்கு இறைவன் உணர்வு முற்பட இருந்து காட்ட வேண்டும் என்பர்.

5. 'பாரதியார்' அம்முறையைப் போல் 'சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீபவொளி நமக்குப் பல உண்மைகளைக் காட்டுகின்றது என்று பாடுகிறார்.'

**அப்பாட்டு உணர்த்தும் உண்மைகளிற் சில:**

1. சித்தாந்த சாமி திருக்கோயில் நந்தா விளக்கு வைக்கப் பட்டிருந்தது. அது முன்னர் (இறப்பில்) எரிந்தது; இப்பொழுது (நிகழ்வில்) எரிந்துகொண்டிருக்கிறது; பிற் காலத்தும் (எதிர்வில்) எரியும் இவற்றைக் கருத்தில் வைத்துக் கொண்டு 'மூன்று வகைப் படும் காலம் நன்று என்பதை முன்ன இடும் சுடராம் என்பர். இது ''சென்ற காலத்தில் பழுதிலாத் திறமும் இனி யெதிர் காலத்தின் சிறப்பும்; இன்றெழுந்தருளப் பெற்ற பேறதனால் எற்றைக்குந் திருவருளுடையேம்'' என்ற சேக்கிழார் திருவாக்கை நினைவுபடுத்து கிறது.

2. நாட்டுப்புறத்தில் வாழும் மக்களிற் பலர் நகர வாழ்வின் பகட்டில் மயங்கி நகரத்திற் குடியேறுகின்றனர். அங்ஙனம் குடி யேறின் நாட்டின் முக்கியத் தொழிலாகிய உழவுத் தொழில் சிதை வுறும். சிதைவுற்றால் உணவிற்குத் திண்டாட வேண்டும்.

''நாட்டுப்புறத் தார்களெல்லாம்
நஞ்சைபுஞ்சை வேலைவிட்டுக்
கோட்டுப் போட்டு நகரங்களில்
குடியேறி வாழ்க்கை செய்தால்
உழவு எப்படி ஓங்கும் – நாட்டில்
வறுமை எப்படி நீங்கும்?''

என்பது என்னுடைய பாட்டாகும். எனவே, நாட்டுப் புறத்தில் வாழ்பவர் நகரத்தை நோக்கி ஓடுவதும் நகரத்தில் வாழ்பவர் நாட் டுப்புறத்தில் சென்று குடியிருக்கச் சிணுங்குவதும் நாட்டின் நல்ல நிலையைக் கெடுத்து விடும் என்பதை அறிஞர் கருத வேண்டும்.

''திருப்போரூர் தவத்திரு சிதம்பர சுவாமிகள்'' சென்னைப் பட்டின வாசத்தைவிட முருகன் வாழும் திருப்போரூர் கிராம வாசமே சுகத்தைத் தரும் என்னும் கருத்தினை,

''அளகா புரியன்ன பட்டினத்
தேசுதை யாலவனைந்த
களவார் முகில்படி மாடத்தி
னூடு கலித்தலினும்
புளகா டவியெழ மெய்ப்போரி
வேலனைப் போற்றியுய்வார்

வளவார் புறந்திண்ணை வைகுதல்
ஏதமில் மாசுகமே''
—(திருப்போரூர் சந்நிதிமுறை)

என்று கூறியுள்ளார். நாட்டிற்கு நல்லன கூறும் பாரதியாரவர்கள் 'பட்டினந் தன்னிலும் பாக்கம் நன்றென்பதைப்'

''பார்க்க ஒளிர்சுடராம்—பெண்ணே!
பார்க்க ஒளிர்சுடராம்''

என்று பாடுகிறார். பாரதியார் பாட்டைப் படிப்பவர்கள் அவர் கூறும் அரிய கருத்தின் உண்மையை உணர்ந்து பட்டினமாகிய நகரத்தில் வாழ்வதைவிடப் பாக்கமாகிய கிராம வாசமே சிறந்த தென்பதைப் பின்பற்ற வேண்டும். அரசியலாரும் கிராமங்களை வாழ்வதற்குத் தகுதியாக மாற்றி அமைக்க வேண்டும்.'

பாரதியார் இதனை அடுத்து மற்றொரு கருத்தினையும் கூறு கிறார்.

''கட்டும் மனையிலும் கோயில்நன் றென்பதைக்
காண ஒளிர்சுடராம்—பெண்ணே!
காண ஒளிர்சுடராம்''

என்பது அக்கருத்தமைந்த பாடலாகும்.

தனி மனிதன் ஒருவருக்காகக் கட்டப்படும் வீட்டினைக் காட்டி லும் பொதுமக்கள் பலர்க்கும் பயன்படுமாறு அமைக்கப்படும் கோயில் நலம் விளைக்கும் என்னும் உண்மையைக் காண்பதற்கு ஒளிரும் சுடராக உள்ளது அத்தீப வொளி என்பது அப்பாட்டின் கருத்தாகும்.

தனி மனிதன் ஒருவன் கட்டிக்கொள்ளும் வீடு பெரும்பாலும் தன்னலம் வளர்வதற்கே இடமாக இருக்கின்றது. கோயில் பல பொதுமக்களுக்குப் பயன்பட்டு பொதுநலம் வளர்வதற்கு இடமாக உள்ளது. அதனால் ''கட்டும் மனையிலும் கோயில் நன்று'' என்று பாரதியார் கருதுகின்றார்.

## முடிப்புரை:

'பாரதியார் பாடல்கள் நல்ல முறையில் ஆராயப்பட்டு அவர்தம் சிறந்த கருத்துக்கள் உலகமெங்கும் பரவ வழிசெய்ய வேண்டும்' என்பதை முடிபுரையாகக் கூறுகின்றேன்.

—(நிறைவு)—

# கலைக்கடல் வாழ்க்கை விளக்கம்

முனைவர் இர. குழந்தைவேலு, எம். ஏ., பிஎச். டி.,

## [1]

தமிழ்ப் பெருமகனார் தென்பட்டினம் பொன்னுசாமி மீனாட்சி சுந்தரனார் கல்வி என்னும் பல்கடலைத் தம் கூர்த்த அறிவெல்லாம் கொள்ளை கொடுத்துக் கற்றுத் தேர்ந்த தனிப்பெரும் கலைஞர். அவரே 'தெ பொ. மீ.' எனத் தமிழகம் பெருமையோடு சுருக்க மாகக் குறிப்பிட்ட—குறிப்பிடும் –பெருந்தகை ஆவர். அந்நாளில் தம் இல்லத்திற்குத் 'தமிழகம்' என்னும் பெயர் அணிவித்து அவர் சென்னையில் உவந்து வாழத்தலைப்பட்ட தமிழறிஞர். அவர்தம் தந்தையாரும் தமிழ்ப்புலமைச் செல்வர். இவ்வாறு வழிவழியாக வந்த தமிழ்க்குடியில் பிறந்தவர் அவர். ஆதலால் இந்தியப் பெரு நாடு விடுதலை காணுதற்கு முன்னரே — அரசினர் கருத்து வழியில் சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' என்று வழங்கப் பெறுதற்கு முன் னரே—அவர்தம் மனை 'தமிழகம்' எனப் பெயர் பெற்றது என்னும் கருத்து வியப்பளிக்க இடமில்லை. இம்மாநிலத்து மக்கள் பலரும் தாய்மொழியாகக் கொண்டு பேசும் மொழி தமிழ் ஆதலால் இது தமிழகம் என்று அழைக்கப்பெறுதலே முறைமை ஆகும் என்பது அவரது விருப்பம். தமிழைத் தம் வாழ்வில் உயிராகப் போற்றி னார். அவருக்குத் தமிழே தமிழகமாகத் தோன்றியது. இவ்வண் ணம் அவரது கருத்தில் 'தமிழகம்' ஆழமாகப் பதிந்து நின்றது. தமிழ்க்காதல் அடியாக அவருக்கு எழுந்ததே நாட்டுப்பற்று என்பது இங்கு ஏற்படுகின்றது. அவ்வாறு தாம் பிறந்த தமிழ்க் குடிக்கும், பேசும் தாய்மொழிக்கும், வாழும் நாட்டுக்கும் அவர்'குடல்விளக்கம்' செய்தார்.

## [2]

கலைக் கழகமாக வாழ்ந்த முனைவர் தெ. போ. மீ. தன் கடன் கல்விப் பணி செய்திருத்தல் என்று உரமாகக் கொண்டார்; கல்வி உலகில் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் பொறுப்பென்றும் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பென்றும் தம்மைச் சேர்ந்த பலதிறக் கல்வித் துறைகளில் தமிழக வேட்கையோடு கட னாற்றினார்; பெரும் பெயர் பெற்றார்; தம் கல்வித் தகுதியால் மதுரைப் (காமராசர்) பல்கலைக் கழகத்து முதல் துணைவேந்த ராகச் சிறந்தார். பேராசிரியர் என்னும் சுருக்க எல்லையிலிருந்து பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர் என்னும் கல்வி உலகத்துப் பரந்த எல்லைக்கு அப்பல்கலைச் செல்வர்தம் பணி விரிந்தது. கல்வி

உலகில் அவ்வல்லாளர் ''வகுத்ததே வாய்க்கால்'' என்றவாறு பல்ரும் போற்ற வாழ்ந்தார். அப்பல்கலை வல்லாளரைத் தமிழ்த் தென்றல் திருவாரூர் கலியாணசுந்தரனார் முன்னாளில் மதித்த மாட்சி அறிதற்குரியது. அவர் மதித்த மாட்சி ''மீனாட்சிசுந்தரம் கலைக்கடல்'' என்பதாகும். அம்மாட்சியின் விளக்கமாகப் பின்னாளில் முனைவர் தெ. பொ. மீ. தம் வாழ்க்கை அமைந்தது. இந்நாளில் இந்நாடும் வெளிநாடுகளும் அறிந்த உண்மை அது.

## [3]

இருபதாம் நூற்றாண்டு முன்னர்ப் பிறந்தது. அடுத்து அது பிறந்த அத்திங்களில் பின்னர் முனைவர் தெ.பொ.மீ. (8-1-1901) பிறந்தார்; இந்நூற்றாண்டு நிறைதற்கு முன்னரே நிறைந்த கலைக்கடலாயினார் இவ்வாறு அமைந்த பிறப்பின் நெருக்கத் தொடக்கங்களைக் கொண்டு, இந்நூற்றாண்டோடு அந்நிறை கடலாரைச் சேர்த்துக் காணவே, இங்கு இரட்டைக் குழந்தைகளில் ஒருவராயினார் அவர் என்றவாறு பாராட்டுதற்குரியராயினார்; மூத்தவராயினார்.

புத்தொளியோடு தமிழ் வளர்தற்கு அவர் பாடுபட்டார் என்று இறந்த காலத்தால் (27—8—1980) சுரக்கும் கண்ணீரோடு எழுதாது, புத்தொளியோடு தமிழ் வளர்தற்கு அவர் பாடுபடுகின்றார் என்று நிகழ்காலத்தால் துள்ளும் களிப்போடு குறிப்பிடுதற்கு இப்போது இடமில்லையே என்னும் ஏக்கம் தோன்றுகிறது.

*—(நிறைவு)—*

---

### மாமல்லை சிம்மக் கட்டில்

குன்றின்மேல் நடுவில் மேடைபோல் ஒரு பாறை செதுக்கப்பட்டுள்ளது. இதில் தலையணைபோல் சிம்மம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இதை சிம்மக்கட்டில் எனலாம். இது அமைந்திருக்கும் சூழ்நிலை மனத்துக்கு இன்பத்தை அளிக்கவல்லது. பல்லவ மன்னன், மாமல்லையில் கலைச்செல்வங்களைத் தோற்றுவித்தபோது அடிக்கடி தலைநகரான காஞ்சியிலிருந்து, தேவியர் சூழ இங்கு வந்திருக்க வேண்டும். அவ்வாறு வரும்போது இக்கட்டிலில் அமர்ந்து உரையாடியிருக்கவேண்டும் என்று எண்ணும்போது உள்ளம் பூரிக்கும். அதற்கு ஏற்ப இதன் அருகில் பல்லவ அரண்மனை ஒன்று இருந்ததாகக் கூறுவர். இங்கு பண்டைய கட்டடங்கள் இருந்த தடயங்கள் காணப்படுகின்றன.

முனைவர் இரா. நாகசாமி,
மாமல்லை.

# சொல்லாய்வில் புதிய கண்டுபிடிப்புகள்

புலவர் நா. இராசகோபாலன்,
எம். ஏ., பி. லிப். எஃசி., டிப். ஃபிரெஞ்சு.,

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு சர் வில்லியம் சோன்சு என்ற அறிஞர், ஐரோப்பிய மொழிகள் கிரேக்கம், இலத்தீனம் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன என்ற உண்மையைக் கண்டு பிடித்து உலகுக்கு உரைத்தார். அம்மொழிகள், பழைய சமற்கிருதத்துடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும் அவரே கூறினார்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இராபர்ட் கால்டுவெல் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, கோண்டு, பிராகுவி முதலியன தமக்குள் உறவுடைய திராவிட மொழிகள் என்பதைக் கண்டுபிடித்து அவனிக்கு அறிவித்தார்.

தமிழகத்தில் தற்போது, சோன்சும் கால்டுவெல்லும் நடந்த அடிச்சுவட்டில், ஒருவர் நடைபோடுகிறார். அவர் எழுபத்தேழு வயதுடைய இளைஞர். அவரது பெயர் கே. சி. ஏ. ஞானகிரி நாடார் என்பது. அவர் கம்பெனி சட்டத்துறையில் வல்லுநர். முன்னாளில் தனியார் வசமிருந்த ஓர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்.

அவர் பொழுது போக்காகச் சொல்லாய்வினைப் பத்தாண்டுகளுக்கும் மேலாகச் செய்து கொண்டு வந்தார். அதன் விளைவாகத் தமிழின் தொன்மை கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத நெடுந்தொலைவுக்குச் சென்றுவிட்டது. ''உலகத் தமிழ்'' என்று இவர் குறிப்பிடும் இம்மொழியின் பெருமை அவரால் அயல்நாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. வடமொழியிலிருந்துதான் தமிழ், சொற்களைக் கடன் வாங்கியது என்ற கூற்று மங்கிக் கொண்டிருக்கும் இந்நாளில், ஐரோப்பிய மொழிகளுக்குத் தாய் நிலை தாங்கும் கிரேக்கமும் இலத்தீனமும் ஆகிய பழம் பெருமை வாய்ந்த உயர்தனிச் செம்மொழிகளும், இன்று உலகளாவிய பரந்துபட்டிருக்கும் ஆங்கிலமும், தமிழிலிருந்த எண்ணிறந்த சொற்களைக் கடன் வாங்கியுள்ளன என்று இவ்வறிஞர் ஆய்வு செய்து ஆணித்தரமாக அறிவித்திருக்கிறார். 'கிரிம்' என்ற சொல்லியல் அறிஞர் மேலைநாட்டுச் சொற்களின் உருவ மாற்றம் பற்றி விதிகளை வகுத்தளித்ததைப்போல, இந்த அறிஞரும், தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் இடம்பெற்ற முறைகளுக்கு, விதிகளை நுணுக்கமாகக்

கண்டறிந்து நூலாகவும் வெளியிட்டிருக்கிறார். (இனி அவை 'நாடார் விதி' என்ற பெயரில் உலாவும்)

இவர் இதுவரை நான்கு அரிய நூல்களை வெளியிட்டிருக்கிறார் அவையாவன:

1) Tamil – Its Contribution to The European Languages. — An Etymological Survey Part I. (English) 1972; Part 1 (English) 1975. Part II, (English) 1976.

2) Latin Words of Tamil Origin — An Etymological Dictionary 1981.

3) Greek Words of Tamil Origin. — An Etymological Lexican (1982).

4) A Statement In Tamilo - European Linguistics (In The Matter of Greek and Latin (Words of Tamil Origin) 1982.

இவற்றில் முதல் நூலுக்கு அறிமுகம் தந்த— ''இந்தியக் கல்வியின் அமெரிக்க நிறுவனத்தைச் சார்ந்த ஆல்பெர்ட் பி. ஃபிராங்ளின் என்ற மதிவல்லோர்,

''இது புயலைக் கிளப்பும் நூலாகும்; எல்லாச் சொல்லியல் ஆய்வு மாணவர்களின் புத்தக அலமாரிகளிலும் இருக்கப்போகும் சுவடியாகும். இது, அறிஞர் வட்டாரத்தில் அலறலை எழுப்பலாம்; சிலர் இதன்மீது கேலிக் கணைகளை வீசலாம்; ஆனால் (இதன் மூலம்) மேலை நாட்டு மொழி அகராதி ஆசிரியர்கள் இதுவரை அறியாதிருந்த பல பதங்களின் தமிழ் வேர்ச் சொற்கள் காலப் போக்கில் தரமான அகராதிகளில் இனி இடம்பெறும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன் இலத்தீன் வேர்ச் சொல்லான 'Fa' என்பதற்கு இவர் தமிழ் மூலத்தைக் காட்டியிருக்கிறார். இது சரியாக இருக்குமாயின், ஆங்கிலத்தின் மிகப் பல சொற்களுக்குத் தமிழ் மூலம் அமைந்திருக்கும். இவர், இதுபோன்ற பல வியத்தகு கண்டுபிடிப்புகளைத் தெரிவித்திருக்கிறார். இவை, பழக்கத்தின் தேய்ந்த பாதையில் செல்லும் சொல்லாய்வு அறிஞர்களுக்குப் புதுமையைத் தரும். ஒளிந்திருக்கும் தமிழ் மூலங்

களையும் தெரிவிக்கும். திறனாய்வுச் சோதனையில், இவரது முடிவுகள் வெற்றிபெற்று விடுமானால், நமது மொழியை விளங்கிக் கொள்வதிலும், தமிழின் கடந்த காலத் தாக்கத்தை, நடைமுறை நிலையை அறிவிப்ப திலும், அவர் இணையற்ற தொண்டு புரிந்திருக்கிறார் என்பதை அறிவியல் தெரிவித்து விடும்''

என்று கூறுகிறார்.

மூலங்கள் (Origins) என்ற சிறந்த நூலின் ஆசிரியரான இலண்டன் மாநகரத்து எரிக்பேட்ரிட்சு என்ற ஆங்கிலச் சொல்லியல் அறிஞர் திரு. ஞானகிரி நாடாரின் முயற்சிகளை வாழ்த்தி மடல் வரைந்திருக்கிறார். எடின்பரோவைச் சேர்ந்த பேராசிரியர் ஆய்சர்,

''நீங்கள் மிகவும் சிக்கலான துறையை மேற்கொண் டிருக்கிறீர்கள். உங்கள் ஆய்வுப் போக்கில், மாற்றங்கள் ஒழுங்கான நியதியும் அதிக எண்ணிக்கையும் கொண்ட சொற்களை வெளிப்படுத்துமானால் அவை கவனத்துக் குரியதாக அமையும்''

என்று மறைமுகமாக ஊக்கம் தந்திருக்கிறார்.

அறிஞர் திரு. ஞானகிரிநாடாரின் ஆராய்ச்சி முடிவுகளில் முக் கியமானவை:-

1) கிறிஸ்துக்கு முன் பலதுறைச் சிறப்புடன் வீறுகொண்டிலங் கிய தமிழர்களுக்கும், கிரேக்க உரோமனியர்களுக்கும் இடையில் மிகவும் நெருக்கமான தொடர்பு இருந்தது. (இக்காலத்தில் வீட்டைக் காக்கும் 'கூர்க்கர்'களைப்போல் அக்காலத்தில் அரசனின் மெய்க்காப்பாளர்களாக யவனர் கள் இருந்தனர். புறநானூற்றில் வரும் ஏணிச்சேரி என் னும் தொடர் யவனச் சேரியின மரூஉவாக இருக்கலாம்.) இதன் விளைவாக, தமிழ்நாட்டுப் பொருள்களுடன், பழந்தமிழ்ச் சொற்களும் அந்த நாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும். அச்சொற்கள், அவர்களின் மொழிகளில் இரண்டறக் கலந்திருக்க வேண்டும்.

2) தமிழ் ஒன்றுதான், சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து உயிருள்ள பேச்சு மொழியாக விளங்கி இன்றும் முழுநலத்துடன் திகழ்கிறது.

3) தமிழின் பல ஓரசை ஈரசை வேர்ச் சொற்களிலிருந்து, கிரேக்கம், இலத்தீனம், தியூடானிக், ஆங்கிலம் போன்ற பல ஐரோப்பிய மொழிகள் தங்கள் சொற்களை அமைத் துக் கொண்டிருக்கின்றன.

4) ஆங்கிலச் சொற்களில் கால்பகுதி தமிழ் மூலக் கூறுகளைப் பெற்றிருக்கலாம். எனவே ஆங்கிலத்துடன் பத்தில் ஒரு பங்கே உறவுடைய சமற்கிருதத்தைவிட, தமிழே அவ் வயன் மொழியுடன் நெருக்கமான தொடர்புடையது.

5) தமிழ்ச் சொற்கள், கிரேக்கம், தியூடானிக் ஆகிய மொழி களின் வழியாகச் சென்று சமற்கிருதத்திற்குள் நுழைந் திருக்கின்றன.

() மருத்துவம், நீதி ஆகிய துறைகளில், குறிப்பிடத்தக்க சில தமிழ்ச் சொற்கள் தெளிவான ஆங்கில வடிவத்தைப் பெற்று இன்றும் வழக்கிலுள்ளன.

இவர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூற்களிலுள்ள சொற் களை மட்டுமே, தன் ஆய்வு மூலமாக எடுத்துக் கொண்டிருக்கிறார். அவற்றின் பழம்பொருளையே பிற மொழிச் சொற்பொருளுடன் ஒத்திட்டு ஆய்கிறார்.

தேக்கு (Teak), இஞ்சிவேர் (Ginger), மிளகுத் தண்ணீர் (Mulligatawny), வெற்றிலை (Betel), அரிசி (Rice), கட்டைமரம் (Catamaran), சுருட்டு (Cheroot), காசுக்கொட்டை (Cashewnut), நாரங்கி (Orange) முதலிய பல சொற்கள் தமிழிலிருந்து ஆங்கில மொழிக்குச் சென் றிருப்பது பலருக்கும் தெரியும்.

ஆனால் இவர், தன் முதல் நூலில் இரண்டாயிரத்து நூறு ஆங் கிலச் சொற்கள் தமிழ் மூலத்தைக் கொண்டுள்ளன என்று நிரூபிக் கிறார். இவர் இந்நூலை, பிறகு இரு பகுதியாகப் பிரித்து மறு பதிப்பாக்கியிருக்கிறார். (மேலும் நான்கு பகுதிகள் வெளிவரும்.) இவற்றில் இவர் தமிழ்ச் சொற்களை அகரவரிசைப்படுத்தி, அதன் படியே ஆங்கிலச் சொற்களை அமைத்திருக்கிறார். (இவ்விரு நூல் களிலும் இவர் சுமார் எண்ணூற்று நாற்பது சொற்களுக்குத் தமிழ் வேர்ச்சொற்களைக் காட்டியிருக்கிறார்.) அச்சொற்களில் சில:–

அளி (Alms), எல்லாம் (All), கட்டில் (Cot), கலம் (Calley), கவுள் (Jowl), காசு (Cash), மரபு (Moral), வெவ்வர் (Fever), அமலை (Ample), உருமம் (Warm), கரம்பை (Ceramic), துவலை (Dew), பூசை (Pusssy), மரு (Marjocam), மாறு *(இறப்பு)*–(Mortal), மாறு *(மாற்றுதல்)*-(Market) போன்ற சொற்கள் சொல் மாற்றத்தை எளிதாக புலப்படுத்தும் பிறவற்றை

ஊன்றிப் பார்த்தால்தான் சொல் மாறாட்டம் தெரிய வரும்.

மருத்துவத் துறைக்குரிய Anatomy என்ற சொல் தமிழின் முழுவடிவமே என்று இவர் கூறுகிறார். அண்ணம்+துமி = மேற்புறத்தை வெட்டுதல் என்ற இரு சொற்களின் கூட்டே இவ்வாறு உருமாறியுள்ளன என்று இயம்புகிறார்.

'கொள்ளு' என்பது Able என்று மாறியது எனக் கூறும் இவர், இதன் அடிப்படையில், Ability, Habit, Habiliment, Dishabille, Habilitate, Rehabilitate, Habena, Habenula, Nucleus, Habeas corpus, Habendum, Hobnob, Adhibit, Exibit, Inhabit, Prohibit, Debit, Debenture, Due முதலிய பல சொற்கள் பிறந்துள்ளன என்று எடுத்துக் காட்டுதல் அறிந்தின்புறததக்கதாம்.

—×—

---

## புறத்தாற்றில்—பிறத்தாற்றில்

அறநெறிச் செல்வர் திருவள்ளுவர் தந்த உலகத் தமிழ் மறையான திருவள்ளுவத்தில், காலநெடுமை, கணக்கிட்டு உரைக்க முடியா ஏட்டுச் சுவடிகளின் வழியே தொடங்கிய நெடிய பயணம், ஏடு எடுத்து எழுதியோரின் கவனக் குறைவு முதலிய காரணங்களால் ஏற்பட்ட பாட வேறுபாடுகள் பலவாகும். அவற்றுள் இல்லறவியலுள், இல்வாழ்க்கை அதிகாரத்தில்,

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்,
போஒய்ப் பெறுவது எவன்.''

என்னும் பாடம் ஒன்றும்,

''... ... ... ... ... ... ... ... பிறத்தாற்றில்,
போஒய்ப் பெறுவது எவன்''

என்னும் மற்றொரு பாடமும் ஏட்டில் உள்ளதென அறிஞர்தம் ஆய்வறிக்கை புலப்படுத்தும். இவ்விரு பாடங்களுள் புறத்தாற்றில் என்னும் பாடத்தையே எல்லோரும் எடுத்தாண்டு வருகின்றனர். இந்நிலை பயிரைப் பிடுங்கி களையை வளர்ப்பதை ஒக்கும். ஏன் எனின் அறம், அறன் சொற்களுக்கு எதிர்மறைச் சொற்களாக வள்ளுவர் பிறம், பிறன் என்பனவற்றையே எடுத்தாண்டுள்ளமையும் ஓரிடத்தில் கூட புறம், புறன் என்னும் சொற்களை எடுத்தாளாமையும் இதன் உண்மையினை புலப்படுத்தும். —கா. அரசன்.

# பாஞ்சாலி சபதம் — ஆய்வு

கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

வள்ளுவர், தன் வாய்மொழியாலும், இளங்கோ, தன் இன்னுரையாலும் கம்பர், தன் கவி நயத்தாலும், நாட்டுக்கும் மொழிக்கும் விழிப்பூட்டிய புலமை இயல்புகளை, பாரதியார், புகழ்ந்தும், உவந்தும் பாடி, செந்தமிழின் பெருமையினை பிறங்கவைத்த அம் மூவர்களால், தாம் தகுதிபெற்றதையும், தம் பாக்களில் பலபட பாராட்டியிருப்பது எண்ணற்றது. இப்புலவர்களது எண்ணத்திற்கும் புலமைக்கருத்துக்கு ஏற்ப, 'பாஞ்சாலி சபதமாகிய தன் காப்பியத்தைச் சுவைமல்கும் காவிய மரபின் உரிமையோடு, புதிய வடிவில் பாரதியார் அமைத்துள்ளார். பொதுவாக தமிழ்ச்சுவை மாந்தும் புலமைத் திருவுடையார், இன்பத்தில் நண்பனாகவும், பிரிவில் துணைவனாகவும் வயங்கும் கண்ணீரைத் துன்பத்தின் தலைவனாகவும் கருதுவர். ஏழையர் அல்லற்பட்டு ஆற்றாது வடிக்கும் கண்ணீரால் விளையும் தீமையினை, வள்ளுவர் தெரிவித்து, அத்தகைய கண்ணீர் செல்வம் தேய்க்கும் படையெனக் கொண்டார். இளங்கோவும் கண்ணகியின் கண்ணீர் எவ்வாறு பாண்டிய மன்னனது உயிரினை வாங்கி, மதுரையினையும் எரித்தது என்பதைக் கூறிப்போந்தார். தவவேலியையுடைய சிறைக்கண்ணிருந்த சீதையின் சீலத்தையும், ஏற்றத்தையும் கூறப் புகுந்த கம்பர், எவ்வாறு, ஆற்றாது அழுத சீதையின் கண்ணீர். இராவணனை, அவனது குலத்தோடு வேரற அழித்ததென்பதைப் புகன்றார். இத்தகைய பேருண்மையினைப் பாரதியார் தன்காப்பியத்தின்கண் நுட்பமுற திருத்தமான தனது வழியில் விளங்கவைத்தது கூர்ந்து அறியற்பாற்று.

அவலச்சுவை இளிவு, இழவு அசைவு வறுமை முதலாய நிலைக்களன்களை அடிப்படையாகக் கொண்டு, கண்ணீரை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுடைய ஆற்றலையும் மருட்கையினையும் பாரதியார் நன்குணர்ந்து, அல்லலுற்று ஆற்றாமையால் பெருக்கெடுத்து இழிதரும் வெய்ய கண்ணீர் நிலத்திற்படியின், ஞாலமும் அதன் நல்லறத்தோடு அழியும் என்ற கருத்தையும், தன் காப்பிய உணர்வாலே வலியுறுத்துவாராயினர் மற்றும் பாஞ்சாலி அலறித் தேம்பி அழுது சொரிந்த கண்ணீரில் விளைந்த சபதத்துச் சூளுரையும், பாரதப்போருக்கு வித்தாகி, அக்கண்ணீரால் வளர்ந்து பின், மூவேந்தரது முப்படைக்கும் மேலாகி வேரறுக்கும் படைக்கலமாய் துரியோதனின் குலத்தை நாசமுற அடியோடு அழித்த தென்பதையும் பாரதியார் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கேற்ப,

கண்ணீரும் கம்பலையுடன் தன் மனத்தினிலே தனக்கு நேர்ந்த நிலையினை நொந்து, அறநெறி தவறும் அரசவையாம் சூதர் சபையில் சிறையிழந்த புட்போல் பதறி நெட்டுயிர்ப்புறும் பாஞ்சாலியை, நம் மனக்கண்முன், உளம் நாணி உளைந்து நிற்கக் காட்டும் பாரதியாரின் வன்மையினைச் சிறிது காண்குவம்

''பேரழகுக்கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட சபைதனிலே
கூடுதலு மங்கே போய்க் 'கோ'வென் றலறினாள்.''

என்றார் பாரதியார். பின்னர், ஆங்கே தன்னைக் கடமையுறக் காக்கும் ஐவரும் செயலற்று நிலைகுலைந்து சோர்ந்து ஊமையாய் நிற்பதையும், பாஞ்சாலித் வெந்நோக்குடன் உணர்ந்ததையும் உணர்த்தியுள்ளார். மற்றும் புறத்தே, பாஞ்சாலியின் தாழ்ச்சித் துன்பம், அகத்தே வேதனைதரும் அவதூறு விரவிய நிந்தனைத் துன்பம், ஆகிய ஆதரவற்ற நிலையினை சித்தரித்து, 'எவ்வழி உய்வோம்' என தன் பெண்மைப் பாதுகாப்பிற்குத் தவித்துள்ளதை நம் மனக்கண்முன் காட்டி, துன்ப நீக்கத்திற்கு தீர்வுகாணும் நெறி முறையினை நாமே உணருமாறு பாரதியார் விட்டுவிடுகிறார்.

இரக்கமற்ற துரியோதனது சூழ்ச்சியினையும்; மன்றிடை தன் துகிலினைக்களையும் துச்சாதனின் இழிசெயலினையும், பொறுக்க இயலாத கொடுமையினையும் தடுத்துத் துயர் தீர்ப்பவர் யாரும் ஆங்கிலர் என்பதனைக் கண்டுணர்ந்து ஐவர் மனதிலும் அரசியாகிய பாஞ்சாலி, அம்புபட்ட மான்போல் துடிதுடித்துக் குமிறினாள்; ஆவலித்து அழுதாள்; கொந்தளிப்பால் கொதித்தாள். பின்னர் தணிவொடு, ஆருமில்லார்க்குத் தெய்வந்துணையென்பது உலக வாய்ப்பாடு என அறிந்து, பெண்மையரசு, பெண்மையின் மாண்பின் பெயராலும், தாய்மையின் மேட்டிமைத் தகவினாலும் அவைக்கண், பெண்மைவாயால்,

''பெண்டிர் தமையுடையீர் ! பெண்களுடன் பிறந்தீர் !
பெண்பாவமன்றோ ? பெரியவசை கொள்வீரோ ?
கண் பார்க்கவேண்டும் !''

என, வாய்மை மணக்கும் வாசகங்களால் நீதிகேட்டு அலறினாள். நீதிதான் உண்மையாய் இறையன்பினை அடைதற்கு அடிப்படையென்றும், நீதியை நழுவவிட்டு இறையன்பினை மட்டும் அடைதல் இயலாதென்பது ஈண்டு அறிதற்பாலது. மற்றும் பாரதியார் பிள்ளைப்பேற்றை இறைவன் பெண்ணிடமே நம்பி அமைத்ததைக் குறிப்பாக சற்றே உணரும்படி சுட்டியுள்ளதை ஓர்க. பின்னர் அபயக் குரலில்,

''... ... ... ... ... ... ... ... ... என் செய்கேன் ?
துக்கங்கள் அழித்திடுவாய்; கண்ணா !
தொண்டர் கண்ணீர்களைத் துடைத்திடுவாய்'
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
நம்பி நின்அடி தொழுதேன் — என்னை
நாண் அழியாதிங்கு காத்தருள்வாய் !''

என பாஞ்சாலி, மனத்தமுதாம் கண்ணனை வேதனையால் வேண்டித் தேப்பி, ஒளி படைத்த கண்ணோடும் உறுதிகொண்ட நெஞ்சோடும், கண்ணீர் உகுத்தாள். ஈங்கண், வேதமார்க்கும் நடையோடு பாரதியாரது சொற்கள் ஒலி அணுக்களுடன் ஏகுவதைக் காணற் பாலது. மற்றும் பாஞ்சாலி புலம்பல், சாதரண பெட்டைப் புலம்பலாக இல்லாதபடி, காவியத்திற்கோர் மேலாண்மைக்குரிய வலிமை நடையினைத் தந்துள்ளது. இதனையொட்டி பாரதியார் பெண்ணுரிமை முழக்கம் வீறிட, குலிலியும் குரலையும் ஈந்தார்.

கடுந்தவம் புரியாதும் வெம்மை விரதமும் பற்றாதும், கண்ணன் சேவடி தைவரு சிந்தையுடையாள், தன் மனத்துயரினைப் போக்கி 'அஞ்சேல்' என மானத்தை, விரைந்து காக்க, அளவிடற்கரிய கருணைபுரியும் அருட்கண்ணனைக் காண விழைந்தாள்; தனக்குப் படைக்கலமாக கண்ணனை நினைந்து, அவன் நாமங்களைத் நாவிற் கொண்டு, இறையுணர்வால் மனங்கலங்காது நெஞ்சத்துணிவோடு கூடிய தூய்மையில் அவனுக்கே அடைக்கலமாக, அரி, அரி, அரி, அரி, அரி, என்று தன்னை அருளொடு வாழ்விக்க, ஆடை குலையச் சோர்வுற்று நின்றாள். தன் இதயத்தில் அளவற்ற இறையின்ப உணர்வு பெருகக் கொண்டாள். பாஞ்சாலியின் அறிவு இறைவனது உறைவிடத்தை நாடும்போது, அவளது இறையன்பே இறைவன் உறைவிடமாகப் புலனாயிற்று. இதன்வழி வணங்குதற்குரிய கண்ணனை வழிபடல் பாஞ்சாலியின் பிறப்புரிமை யென்பதை பாரதியார் குறிப்பாகச் சுட்டுவாராயினர். தன் உள்ளத்தில் களைகணாயிருக்கும் கண்ணன், கண்ணார அமுதமாயத் தோன்றவே, பாஞ்சாலி உலகத்தை மறந்து ஒருமையுற்றாள், வேதத்திருவிழியாள், சிறுதுரியத் துயிலடைந்தாள். துகிலினை உரிகையிலே, துகிற்கூட்டம் புதிது புதிதாய் பல்வேறு வண்ணங்களுடன், எண்ணத்தில் அடங்காது,

''பெண்ணொளி வாழ்த்திடுவார் — அந்தப்
பெருமக்கள் செல்வத்திற் பெருகுதல்போல்''

வளரவே, துரியோதனாதிகள் மனவழியிழந்து அச்ச நாணினால் விழுங்கப்பட்டார், பெண்மைச் செல்வத்தின் பொலிவினைப்பற்றி ஈண்டு பாரதியார் வேட்கையுடன் தரும் சிந்தனைக்குரிய உவமையின் வீச்சினால் பெண்ணினது பெருமை வாழ்வியலை உணர்ச்சி

வழியில் பார்க்கத் தூண்டிவிட்டார். பின்னர், 'மெய்யில் ஊறு கொள்கரணமைந்து முற்றறி கனவில்,' பாஞ்சாலி கண்ணனைக் கண்டு உட்சோதியிற் கலந்தாள்.

இவ்வண்ணம், மணிவண்ணனது இறை ஒளியும், பாஞ்சாலி யின் இதய ஒளியும் இறையுணர்வு இன்பத்தில் இரண்டற்று ஒன்றிக்கலந்து ஒளிரவே, இறைமையோடு இசையும் மெய்ஞ் ஞானத்தின் மோனத்தைப் பாரதியார் அருமைப்பாடுடன் காவியத் தின் கருப்பொருளாக உணர்த்தி விடுகிறுர். இறைவனுல் விரும்பப் படும் பாஞ்சாலிக்கு இறைமைப் பண்பினையும் பாரதியார் அளித்துப் போற்றிச் சிறப்பித்துள்ளார். மற்றும் ஊனுடல் புகுந்து, உயிர் கலந்து, உளம்பிரியாத இறைமையின் இயல்புகளைப் பாரதியார் நமக்கு நன்கு உணர்த்தி விடுகிருர். மற்றும் இதன்வழி இறை பால் இரண்டறக் கலக்கும் அத்துவித இன்பம், ஆன்மா, பெண் தன்மையுற்ற காலத்திலேதான் கிட்டுமென்பதைச் சுட்டுவராயினர். இஃதோடமையாது,

''எங்கும் நிறைந்திருந்த ஈசவெள்ள மென்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப் போற்றி நின்றுல் போதுமடா''
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
''யாதுமாம் ஈசவெள்ள மென்னுள் நிரம்பியதென்
ருேதுவதே போதுமதையுள்ளுவதே போதுமடா''

என்ற காவியக் கலையுணர்வோடு, பாரதக்கண்ணனின் பாவலர், ஞானச் சித்தரது மனப்போக்குடன் மிக எளிமைத் தெளிவோடு, ஒப்பற்ற உண்மையின் உறுதிப்பாட்டைப் புகட்டும் முறையில் நமக்கும் ஆன்மவியலையும் அறிவு இயலையும் ஒன்று கூட்டி, தம் காவியத்திறத்தாலே எழிலுறப் புலப்படுத்தி 'பாஞ்சாலி சபதத்தை' ஒரு தனித்துவம் பெறுமாறு திகழவைத்தார்.

பாரதியாரது காவிய உணர்வோடு கூடிய உள்ளம், கம்பர், இளங்கோ ஆகியோரது உள்ளங்களோடு ஒன்றி உறைந்தும், ஊடாடி உறவு பூணும் தகைமைத்தாயினும், அவர் காவியக் கருத்தையும் பண்பையும் மதி நுட்பத்தால் மலருமாறு பாரதச் சரித்திரத் தேர்ச்சியோடு, வேகத்தை ஆற்றலுடன் புதுமை செய்ய முற்பட்டு காவியத்தைப் படைக்கும் திறம் வியந்து பெரிதும் பாரட்டத்தக்கதாகும். பாஞ்சாலியின் உளத்திண்மையோடு மதி நுண்மையும் இணைந்திருந்தால், மக்கள் எவ்வித அச்சமுமின்றி வாழ்வினிலே விடுதலையடையும் சிந்தனை செம்மாந்து உருவாகு மென்பது பாரதியாரின் கருத்து இக்கருத்தினைக் கொண்டே, அறிவும் ஆற்றலுமுடைய மனித இனம் வியனுலகத்தையும் அமு தென நுகரும் வேத வாழ்வினை கைப்பிடிக்க' என பாரதியார் செயபேரிகை கொட்டுவது உணர்ந்து கொள்ளப்படும்.

பாரதியார், காப்பியவாயிலாக தன் உள்ளத்தில் உதித்த காப்பிய பாத்திரங்களின் தன்மையினை, மெய்ப்பாடுகளின் மென்மை கட்கேற்ப உணர்வு வகையில் குறிப்பாக நிலைபெறச் செய்துவிடு கிறார். சமுதாயத்திற்குப் பயன்கூடும் வகையில் காவியமாந்தர் களது தவறுகளையும், மற்றும் பொதுவாக பழிதரும் இழிய செயல் களையும் சுட்டிக்காட்டி கண்டித்துமுள்ளார். ஈண்டு பாரதியார், மக்கள் பண்புகளைப் பகரும் உலகப் படைப்பாளராய்த் திகழ்வது உணரற்பாற்று. மாயச்சூது அறப்பெரிய குற்றமாயிலங்கி சிறுமை பல செய்து உருக்குலைய சீரழிக்கும் தகைமையுடையதென்பதும் அதனல் பொருளும் பண்பும் கெடுவதோடமையாது அதனில் ஈடு படுவாரை தம் கடமையினின்றும் வழுவச் செய்து வாழ்வுக்கு இடை யூறாக நிற்குமென்பதும் பாரதியார் பலபட எடுத்துக் கூறுவது அறிதற்பாலது. திருந்தாச் செய்கையாகிய தீதுடைய சூது செல வாக்கு உருதவாறு முடிவில் தீங்கிலிருந்து நன்மைமலரும் பான்மை யினை,

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்''

எனும் இயற்கை மருமத்தை காவியத்தின் நற்பொருளாகப் பாரதி யார் சுட்டிக் காட்டுவது உளங்கொளற்பாலது. பகடைக் காயா ஊரை ஆள்வது? என உயிர்த்துடிப்பாலும், உணர்ச்சிக் கொந் தளிப்பாலும் பாரதியார், விதுரன் வாக்காகவும், வீமன் வாயிலாக வும் முறைபட பின்வருமாறு,

''ஐயகோ! இதையாதெனச் சொல்வோம்?
அரசரானவர் செய்குவ தொன்றே?
மெய்ய தாகவோர் மண்டலத் தாட்சி
வென்று சூதினி லாளுங் கருத்தோ?
வையமிஃது பொறுத்திடுமோ? மேல்
வான்பொறுத்திடுமோ? பழிமக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குலமோ நாம்?
தூ!''வென் றெள்ளி விதுரனும் சொல்வான்''

... ... ... ... ... ... ... ... ... ... ...

''இது பொறுப்ப தில்லை—தம்பி!
எரிதழல் கொண்டு வா,
கதிரை வைத்தி ழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்.''

என கவிஞர் என்ற முறையில் கூறுவதைக் காண்க மற்றும் பொழுது போக்குதற்குரிய சூதில் வேதவேள்விப் பொருளை அருஞ் செல்வங்களோடு பணயம் வைத்து நீதி உணர்ந்த தருமன் இழந்து விட்டதையும், அச்செயல்வழி நாடும் குடியும் அழிந்தொழியுமே

என கனற்சியால் நொந்து அத்தவறினைப் பொறுக்காது, 'சீச்சீ! சிறியர் செய்கை செய்தான்' என அறிவு வகையால் கண்டிக்கும் சாயலோடு விமர்சிக்கும் ஆய்வாளராக பாரதியார் விளங்குவதையும் நோக்குக. பாரதியார், அரசியல் அறம் வளர்க்கும் அறிஞராகவும், சிந்தனைக்கு விருந்தளிக்கும் சீரிய ஆய்வாளராகவும், கலையுணர்வு மிக்க கவிஞராகவும், காப்பியத்தில் புதுமை ஒளிரத் திகழ்வது அருமையுடைத்து.

பாரதியார், காவிய மாந்தர்களது குற்றங்களையும் குறைபாடுகளையும், மனப் போராட்டங்களையும், மானுட நோக்கோடு கூறினாலும், அன்னாரது குண அழகினையும் நலங்களையும் அன்பு நோக்கோடு பண்புடையாளர், துரியோதனன், துச்சாதனன் செய்த தவறுகளை தீட்டிக் காட்டுங் காலையிலும், அன்னாரை மூடர்களல்ல, மூர்க்கர்களே என்று பாரதியார் தெளிவுறுத்துகிறார். பணிக்கொடியோனாகிய துரியோதனன், கெடுமைப் பண்பும் கொடுமை நினைவும் நிறைந்து உறைந்த மனமுடையானென்றும், பொறாமையினையே உருவாகக் கொண்டவன் என அவன் மீது வெறுப்புள்ளவராகக் காட்டிவிடுகிறார். துரியோதனன் பிறரைக் கண்டு பொறாமையுறுவதும், சிந்தை வெறுப்புணர்வால் இகல் கொண்டு தானே துன்பத்தை வருவித்து பெருக்க வைத்து இன்னாது புரிவதும், மற்றும் அவர்தம் பொருளை வெளவக் கருதுவதும் பிழையெனக் காட்டி, பிறர் பொருள் வேண்டாமை விறலென்றும், அஃதில்லையேல் அது அழிவினைத் தரக்கூடிய இறலாகும் என்பதை பாரதியார் அறிவுறுத்துவர்.

திருதராட்டினன் நற்குண நற்செய்கையுடையராயினும் சூதில் விருப்பமின்மையினைப் புலப்படுத்தி விடுகிறார். அறநெறி முழுதுணர்ந்த விதுரன் உறுதிபயப்பனவற்றை மெய்ந்நெறி உணர்வால் எடுத்தோதி தன் கடமையினை யாற்றும் பண்பினை விளக்கி, அவனது அறவுரைகள், யாவரும் எஞ்ஞான்றும் மனத் திருத்தற் பாலது என்பதை குறிப்பாகப் பாரதியார் எடுத்துக் காட்டுவார். கல்வி அறிவும் புத்தி விவேகமுமில்லாத துச்சாதனனை, பாஞ்சாலி வாக்கால், கவி பாரதியார் ''ஆண்டகை யற்ற புலையன்'' எனவும் ''காவலிழந்த மதியுடன் கட்டுத் தவறி மொழிபவன்'' எனவும் சுட்டுவாராயினர். கர்ணனை பாரதியார் ''அங்கர் கோன்'' என அழைப்பார்.

அறத் தோன்றலாகிய தருமர், அறநூல் விலக்கும் செய்கைகளை யஞ்சும் நோன்புடையராகக் காட்டி, கவற்றையில் குறுபிரியம் வைத்துள்ளதாக பாரதியார் எடுத்துக் காட்டுவார். அறங்காக்கும் வழக்கத்தை விதிவசத்தால் மறந்து, வலிந்த அழைப்புகளுக்கு

எளிதில் இணங்கும் பான்மையினை உணர்த்தி விடுகிறார். தருமர், அன்பெனும் பண்பால் அருள் உளங்கனிய அறப்பயன் காணும் துணிந்த நன்மையால் உண்மை நிலையினை நயத்திடும் மாண்புடையார்; வழுவாச் சீலம்; வாய்மையிற் கொண்டவர்; செம்மை நெறி நலம் சிதறாத சீரியர். அறவழியினின்றும் பிறழாத நீர்மையர்; ஒள்ளிய உள்ளமுடையார். ஆனால் சிலவமயம் ஒன்றிலும் நிலையிலராய் அறிவிழந்தும் மயங்குவர். அதனால் நல்லாட்சியின் மாட்சி அழியவும் ஒழியவும் தருமன் சூதாட்டம் புரிந்ததை, பாரதியார், விதி மூண்டு வரும்போது அவர் மதியும் மருண்டுவிடும் வகையோடு சுட்டிக் காட்டியுள்ளார்.

பாரதியார் இருவேறு மனநிலைகளையும், அதனால் மாறுபட்ட கருத்துக்களையும் நயமுடன் காட்டி ஒப்பிட்டும் உண்மையினை உணர்த்துவதிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். அறநெறியும் அருள் நெறியும் அணுவளவும் அறியாத சகுனியைப் பற்றிக் கூறுகையில் அருள்வழிப்பட்ட அறத்தை நிலைபேறுடையதாகக் கொண்ட தருமனது பெருமையினையும் அருமையினையும் குறிப்பாகக் காட்டிப் புலப்படுத்துவார். களங்கமற்ற தருமனையும், களங்கமே உருவெடுத்த சகுனியையும், நம் மனக்கண்முன் அவர்களது உளப்பாங்குகளை வேற்றுமைப்பட நிற்பதை எடுத்து விளக்குவார். சகுனிபால் சமுதாய விரோதத் தீய இயல்புகள் குடிகொண்டிருந்ததால், அவனைக் கயவன், பொய் அடர் சூது கொண்ட காய்ந்த உளத்தான், நஞ்சு மனப்பான்மையுடையவன், திருகு நெஞ்சன், அறநூல் விலக்கியவற்றில் பயிற்சி மிக்குவாய்ந்த தீதுபுரி கொள்கையுடையான் எனப் பலவாறு, பாரதியார் புகன்றுள்ளதைக் காண்க. மற்றும் சகுனியை 'தோல்விலைக்குப் பசுவினைக் கொல்லும் துட்டன்' என பாரதியார் கூறியதன் கருத்தினை ஓர்க.

பாரதியார் காப்பியத் தலைவியாய பாஞ்சாலியின் உருவநலனையும் குணநலங்களின் உயர்வினையும் சொல்லாலும் பொருளாலும் நனி விளக்கி அதனூடே மிளிரும் அழகினை நம்முள்ளத்திலே மருவச் செய்து விடுவது அவரது காவிய அறிவின் திறத்தினைப் புலப்படுத்தா நிற்கும். இலக்கியச் சுவை ததும்ப இராம காதையினை இயம்பிய கம்பரது உள்ளத்தில் உலகமெல்லாம் உள்ளதை அவரது சித்திரங்களின் மூலம் கண்டுணர்ந்த பாரதியார், அதனாலே தம் உள்ளத்திலும் உலகளாவிய தெய்வ சக்தி யிருப்பதைத் தேர்ந்து, பூவினத்துள் தாமரை போலும் புள்ளினத்துள் ஓதிமம் போலவும் இருக்கும் காப்பியத் தலைவியை பராசக்தியாக வேதாந்த ஞான உணர்வோடு பாவித்துள்ளார். அமைதியின் உருவாய் வரம் பெற்ற தெய்வ வடிவழகியாகவும், பெருந்தவத்து நாயகியாகவும்,

ஞானத்தின் பிறப்பிடமாகவும் அறிவின் இருப்பிடமாகவும், ஆற்றலின் உறைவிடமாய பண்பின் பிழம்பாகவும் பாரதியார் பாஞ்சாலியை சித்தரித்துள்ளார். மற்றும் காப்பியத் தலைவியை, செல்புகழைத் தனக்கேயுரியதாய் நிலைபெறச் செய்யும் நல்லறப்பண்பினளாகவும், மங்கையர் குலம் வளர்க்கும் நல்லாளாகவும் உருவாக்கி விட்டார். நாணேடுடன் பிறந்து மாண்மிகு பண்பாடுடைய தூய நெஞ்சினளாகிய பாஞ்சாலியை,

''வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெட்கித் தலைகுனித் தாங்குவந் தெய்தி
அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததோர் மாமன் அடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்ருள்''

என வியப்பும் உவகையும் தோன்றுமாறு பாரதியார் நம் அகக்கண் முன், முதற்கண், காட்டி விடுகிருர் இதன்வழி அறிவியலைச் சீராக உணர்ந்து அதற்குத் தக ஆன்மவியலை வளர்க்கும் பாஞ்சாலியின் தெய்வநலஞ் சிறக்கும் பெற்றிமையை பாரதியார் உணர்த்தியுள்ளதைக் காண்க. மாதவஞ் செய்து பிறந்த நங்கையாய பாஞ்சாலியை, சக்திதான் ஞானமாகும் என்ற கருத்துபட, ஞானசுந்தரியென பாரதியார் பகர்ந்து பெருமை கொள்வர். அவர் பாஞ்சாலியை, அறக்கற்பொழுக்கத்தில் வீறிய ஞானத்திண்மையுடையராய்த் திகழச் செய்துவிடுகிருர். பண்டைத் தமிழ்ச் சான்ருேர்கள், பழிபிறங்காப் பண்புடைய பத்தினிப் பெண்டிர்களை, தத்துவஞானிகள் எனக் கூறுவது பெருவழக்காக யுள்ளதை உணர்ந்த பாரதியார் பாஞ்சாலியை ஞானசுந்தரியெனப் போற்றுவது பொருத்தமுடைத்து.

பெண்ணழகைத் தன்பால் கொண்டு கற்பொளி மின்னும் அமுதம் போன்று, வேள்விக் கனலைச் சுமந்த மறக்குலத்து தெய்வத் தவத்தியை. பாரதியார், பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவி மகளாக நமக்கு அறிமுகப் படுத்தி, மெய்த்தவப் பாஞ்சாலியின் மென்மைத் தன்மையினை உணர்தற்குமுரிய இனிமை நல்கும் முறையில் அழகுற கூறி யிருப்பது சற்று கவனிக்கற்பாலது.

''... ... ... ... ... ... ... ... புகழ்ப்
பாஞ்சால நாட்டினர் தவப் பயனை
ஆவியில் இனியவளை—உயிர்த்
தணி சுமந் துலவிடு செய்யமுதை
ஓவியம் நிகர்த்தவளை—அரு
ளொளியினைக் கற்பனைக் குயிரதனைத்
தேவியை, நிலத்திருவை—எங்குந்

தேடினுங் கிடைப்பருந் திரவியத்தை
படிமிசை இசையுறவே—நடை
பயின்றிடுந் தெய்விக மலர்க் கொடியைக்
கடிகமழ் மின்னுருவை—ஒரு
கமனியக் கனவினைக் காதலினை
வடிவுறு பேரழகை''

என பாரதி பராவி, தாம் நுண்ணிதின் உணர்ந்து போற்றி இன்புறும் காவியத் தலைவியை கனிந்த உள்ளத்தோடு நமக்கு சிறப்புற எடுத்துக் காட்டி நம்மையும் அவ்வின்பத்திலே தோயும்படி வாழ வைத்து விடுகிறார். பாரதியார் முன்னர், கதிர்மதியன்ன முகத்தாளை, மின்போல் காட்டி (120), பின்னர் அதனின்றும் வேறுபட இளங்கோவின் சித்திரமாக. அம்மெல்லியளாலின் மறக்கற்பொழுக்கத்தில் வீறிய, திண்மை வாய்ந்த ஞானத்து உள்ளக்கனல், சூதுத் துயர் மலிந்திடும் அவைக்களத்தே. எவ்வாறு மின்னுற்றல் வாய்ந்து எழுந்தது என்பதைத் தெளிவுறுத்துவாராயினர். மற்றும், எவரும் வெருவுற வெகுண்டு எழுப்பும் ஆத்ம வீர முழக்கத்தை வெல்லும் தன்மையதாய் விளங்கும் சொற்களின் வழி வெளிக்காட்டியுள்ளார். இதயத்தை ஊடுருவச் செய்யும் பாஞ்சாலியின் வீரமும் தீரமுமாய வாக்குகளின் வழி, உரிமை வாழ்வில் அச்சமின்மையால் எழும் பேச்சுரிமையின் நயத்தையும் தத்துவத்தையும் பாரதியார் தெளிவுறுத்தி குறிப்பாக பேச்சுரிமையினை நெகிழ விடாது சிறப்புறக் காக்கவேண்டுமென வற்புறுத்தி விடுகிறார். இதனுன் உரிமை வாழ்வில் அறிவு இச்சை செயல் யாவும் வேரூன்றுவதால் எழும் இலக்கியமும் வீறுகொண்டு நிலவுதல் இயல்பு என்பதற்கு 'பாஞ்சாலி சபதம்' ஓர் எடுத்துக் காட்டு.

பாரதியார், பெண்மையின் பெருமையினைப்பற்றி உயர்ந்த எண்ணமுடையவரென்பது தன் காப்பியத் தலைவியைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் ஒரோவழி நன்கு அறியப்படும். பண்டைத் தமிழ்ச்சான்றோர் உய்திபெறவேண்டி இறைவனையும் அவனது அருட்சக்தியாய பெண்மையினையும் விலக்காது இயற்கை நெறிக்கேட்ப இணைத்து போற்றியது 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்பதால் புலப்படும். இதனால் பெண்ணவனாகிய பெருமான் துடியனைய இடைமடவாள் பங்கனாயினனென்பதை உற்றுநோக்குழி, பண்டைத்தமிழ்ச் சமுதாயம் 'ஆணொடு பெண் முற்றும் நிகரென'வும், 'ஆணுக்கிங்கே பெண் இளப்பில்லை' எனக் கொண்டு, பெண்மைக்கு சம உரிமை அளிக்கும் பண்பாட்டின் இயல்பினை வளம்படுத்தா நிற்கும், இதனையே கருத்துட் கொண்டு பாரதியார் தமிழ்நாடு வாழ சுதந்திரம் அடைவதற்கு நெடுநாட்கு முன்னர், பெண்ணுரிமைக்கு தனிப்பெருமை அளிப்பது இன்றியமை

யாதெனத்தெளிவுற மெய்ப்பித்து காட்டியது ஒருவாறு உணரப் படும். மற்றும் சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் என்ற வள்ளுவர் வாக்கு பெண்ணின் உரிமைக்கும், சுயாதீன அடிப்படையில் நிறையெனும் பண்பினல் மலர்ந்து, நெஞ்சத்து நெறியில் நலம் நிறைந்த புகழொடு வளரும் நல்லொழுக்கத்திற்கும் ஊரன் செய்யும் பான்மையது. இதனியல்பு உணர்ந்து பாரதியார் பெண்ணுரிமையினையும் வேத சாரத்தோடு அறிந்து, பெண்ணின் பெருமையினையும், சுதந்திர உரிமையினையும் பாஞ்சாலியின் வீர எழுச்சி மூலம் சுட்டிக் காட்டியுள்ளார். பெண்மையிடம் விளங்கி விளையும் பண்பாடுகளும், கமழும் கற்பின் திண்மையும், நாட்டு வளத்திற்கும் சமுதாயச் செழிப்பிற்கும் நலனூட்டும் எனக் கொண்டு, பாரதியார் பெண்மை யென்பது, அமைதி நிலையினையும் தன்மையினையும் காட்டும் இறைமையென்றே கருதினர். பெண்மைதான் தெய்விகமாங் காட்சி என்பது அவர் வாக்கு. மற்றும் பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் ஆண்டவன் என பாரதியார் கூறி இறைமையுடைய பெண்ணைத் தெய்வமெனப் பாராட்டுதலும் போற்றுதலும் வேண்டுமெனவும், அதனல் வையம் தழைக்கப் பெண்ணைப் பேணுக என அறிவுறுத்தி, பெண்களின் உரிமைப் பாட்டினை உணர்ச்சியோடு சமூக நோக்கில் பாடியுள்ளார்.

உயிரினுமினிய பெண்மையின் சக்தியினையும் பெருமையினையும் அறிவினையும், உரிமையினையும், பாரதியார் காப்பிய உணர்வுடன் சாற்றிப் போற்றி பெண்மையின் விடுதலை உணர்வு வேர்விட்டு படர்ந்து பெண்மை நிலைத்து வாழ்கவும், வெல்கவும் விதி வகுத்து அளித்துள்ளார். பெண்மை நலத்திற்குரிய அறிவியல் பாதையினைத் தெளியக் காட்டும் வகையில் ஒளிரும் எண்ணற்ற உவமங்களை காவிய உணர்வின் அழகொடு கழிபேருவகை பயப்ப பாரதியார் புலமை மாண்போடும் உள்ளத்து உணர்வாலும் வழங்கும் உரிமைக்குரிய உவமைகளை விரிவாக விளங்கக் கூறப்புகின், அவை பெருகுமாதலால், கற்பார் அவற்றை நேரடியாகக் கற்று உவமைப் பயன் கொண்டு ஒளிர்தல் நேரிதாகும்.

புவியனைத்தும் போற்றும், ஓமர், தாந்தே, கொய்தே, சேக்சுபியர், மில்டன், வால்மீகி, கம்பர் இளங்கோ, வியாசர் முதலானோர் கண்டும், தொட்டும் அறிந்திராத காவிய உணர்வுகளால், எல்லையொன்றின்மையெனும் ஞானத்தின் வாயிலாக பாரதியார், பாஞ்சாலி சபதத்தை நீதி இலக்கியமாகப் பொலிவுற இயற்றியுள்ளார். அதனல் பாரதியாரது காப்பிய உணர்வு அவரது தனிக்கவித்துவத்தின் மேன்மையினைத் தெளியக் காட்டிவிடுகிறது. இதனை உள்ளுங்கால், பாரதியாரது கவித்துவ சாதனைக்கு ஆதரவாகயிருந்தது

அவரது வித்தக அறிவும், நுண்ணிய மதிநலத் தெளிவும், கற்பனு தரிசன அழகியலும், தண்டமிழின் சக்தித் திறலும் சாலச்சிறந்த வரமாகத் திகழ்ந்தன வென்பது புலனுகின்றது. பாரதியாரின் காப்பிய உணர்வு இலக்கண இலக்கிய வளங்கொண்டு, மக்களிடத் தில் இறைத் தன்மையினைக் காட்டி, அது வாழ்வின் அன்ருட ஒவ்வொரு நடைமுறைகளில் ஒளிரும்படிச் செய்வது; இயற்கையில் இசைந்து நின்று இலங்கிடும் இறைமையினை மக்களுக்கு உணர்த்தி, இயற்கைக்கு முரணுக நிற்பது மக்களுக்கும் முரணுகுவ தாகும் எனும் அனுபவத்தைப் போதிப்பது; சமய உண்மைகளையும் அவைகளைச் சார்ந்த மெய்ப்பொருளியலையும் தெளிவுடன் உணர்த் தும் பெற்றிமையுடையது; வியக்கத்தக்க வகையில் ஆன்ற வேதப் பொருளினை அளித்து அமைதியோடு அறிவுக்கு விருந்தாக அமை வது; சான்ருேர் காவியத்துக்கே இலக்காக இயங்குவது.

இத்தகைய காப்பிய உணர்வுடன், சமுதாயத்துக்குப் பயன் கூட்டும் வண்ணம் அந்தமில் வேட்கையோடு இன்ப வளமும் அளிக்கவல்ல அருமையுடன், பாரதியார் கருத்துமிகு காப்பியத்தை யாத்துள்ளார். இதற்முன் ஒவ்வொரு வகையில் சிறப்புமுறையில் முதனூல்களாக வழங்கும் தமிழ் காப்பியங்கள் யாவையும் விஞ்சும் வகையில், உள்ளடக்கத்தாலும், வடிவமைதியாலும் சிறந்து உலகெலாம் புகழ, தம் புலமைத் திறத்தாலும், சிந்தனைச் சிறப்பாலும் பாரதியார் வகையுளி செய்து, தன் காவியத்தை செல் வாக்குடன் வாழுந்தன்மையுறப் பெறவைத்தார். இது தமிழகம் அறிந்த கமுக்கமாய், தமிழ்த்தாய்க்கு தலைச்சிறந்த காப்பிய அணி களுள் ஒன்ருகுமென்பது ஒருதலை. இயற்கை அழகுவாய்ந்த தமிழ் அணங்குக்கு ஏனைய காவியப் புலவர்கள் அணிகலங்கள் பல அணிவித்தாலும் பாரதியார் தமிழணங்கிற்குத் தேவையானது சுதந்திரத்துகில் என நல்கி, 'பாஞ்சாலி துகிலுரிதற் சருக்கத்திலே' தமிழணங்கை வீறுடைச் சுதந்திர தேவியாக ஆக்கியதில் யாதொரு ஐயமில்லை. இது சோதிமிக்கதாய் சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது கொண்டு எளிமை எழிலுடன் திறமாக அமைந்துள்ளது. மற்றும் பண்ணூர்ந்த அறமுதலாகிய நான்கின் வளர்ச்சிக் கருத்துக்களைக் கொண்டு தெய்வீகத்தின் மணிமுடியாக் வும் திகழ்கிறது. மக்கள் குறிக்கோளாக அடையக் கூடிய பெரும் பேறுகளைக் கூறும் தமிழ் மொழியைப் புகழிலேற்றும் இக்காப்பி யத்தின் மூலம், பாரதியார் தன் வாழ்வில் மரணத்தை மூழ்கடித்து இறவாநிலை யெய்தி யுள்ளாரென்பது தேற்றம்.

—— (o) ——

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.
## கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

### பேராசிரியர் மணிசுந்தரனார்க்குப் பாராட்டு விழா,
### தமிழ் முதுகலை வகுப்புத் தொடக்கவிழா,
### ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா,
### திரு. ச. இராமநாதன் அவர்களுக்குப் பாராட்டு விழா,
### தமிழ்ச் சான்றோர் நூற்றாண்டு விழா,
### இலக்கிய மன்றத் தொடக்க விழா.

தண்ணார் தமிழ் வளர்க்கும் தகைமைசான்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கல்வி நிறுவனங்களில் ஒன்றான கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ் முதுகலை வகுப்புத் தொடக்க விழாவும், பாரதி தாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பெருமைக்குரிய பேராசிரியர் மணிசுந்தரம் அவர்களுக்குப் பாராட்டு விழாவும், 1982-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பத்தாம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணியளவில் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெரு மன்றத்தில் சிறப்புற நடைபெற்றன.

கைம்மாறு கருதாமல் கடமைஆற்றி, அறிஞர்களை உருவாக்கு கின்ற ஒப்பற்ற பணியைச் செம்மையாகச் செய்துவரும் கரந்தைப் புலவர் கல்லூரியில், 1938-இல் புலவர் வகுப்புத் தொடங்கப்பட்ட ஞான்று, அவ்வகுப்பினைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவ ரான பேராசிரியர் க வெள்ளைவாரணனார் அவர்களே, தமிழ் முதுகலை வகுப்பினையும் தொடங்கி வைத்து, அவ்விழாவிற்குத் தலைமையும் ஏற்றார்கள். கரந்தைப் புலவர் கல்லூரியின் ஓய்வு பெற்ற துணைமுதல்வர் இலக்கணப் பெரும்புலவர் பாவலர் ச. பால சுந்தரம் அவர்கள் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மணிசுந்தரம் அவர்களுக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துப்பா ஒன்றினை உவப்புடன் பாடி அளித்தார்கள்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களைக் கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி. விருத்தாசலம் அவர்கள் பாராட்டும் பொழுது, ''கரந்தைப் புலவர் கல்லூரி வர லாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன் னாள், முதுகலை வகுப்புத் தொடங்கும் இந்நாள்'' என்றார்கள். வடநாட்டின் சாந்திநிகேதனம்போல் இச்சங்கம் திகழ வேண்டும்

என்று கனவு கண்ட தமிழவேளின் கனவு நிறைவேறிக் கொண்டிருக்கும் இக்கட்டத்தில் முதுகலை வகுப்பிற்கு அனுமதி வழங்கிய துணைவேந்தரைப் பாராட்டுதல் ஏற்புடைத்து என்றும், மேலும் மேலும் ஆய்வுத் துறையில் இக்கல்லூரி வளர வேண்டும்; அதற்கான துணையும் துணைவேந்தரிடமிருந்து கிடைக்கவேண்டும் என்றும் கூறினார்கள். மேலும் புதியதோர் உலகம் செய்யப் புறப்பட்டிருக்கின்ற பாரதிதாசன் பல்கலைக் கழகம் தகுதியான துணைவேந்தரைப் பெற்றுள்ளது என்றும், அவர்கள் தலைமையின் கீழ் உறுதியாக அறிவார்ந்த புதிய உலகம் உருவாகும் என்றும், அத்தகைய சிறப்பு வாய்ந்த புதிய உலகினைப் படைப்பதற்குரிய பங்கினை எங்கள் கல்லூரியும் இயன்றவரையிலும் செய்யும் என்றும் உறுதி கூறித் தம் பாராட்டுரையை நிறைவு செய்தார்கள். தொடர்ந்து துணைவேந்தர் அவர்களின் நிர்வாகத் திறமையினையும், செயல் திறனையும் பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மு. சு. கோவிந்தசாமி அவர்களும் மன்னர் சரபோசி அரசினர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சேசாத்திரி அவர்களும், அரசினர் மகளிர் கல்லூரி முதல்வர் பேராசிரியை திருமதி சுசீலாகிளெமண்ட் அவர்களும், திருவையாறு அரசர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பாரதிப்பித்தன் அவர்களும், திருப்பனந்தாள் கல்லூரி முதல்வர் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்களும், தஞ்சை மருத்துவக் கல்லூரித் துணைமுதல்வர் பேராசிரியர் சுகுமார் அவர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

பல்கலைப் பதிவாளர் திருமிகு பேராசிரியர் அ. அருணாசலம் அவர்கள் தமது பாராட்டுரையில் ''துணைவேந்தர் பதவி தகுதியான ஒருவரைப் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டார். பாரதிதாசன் பல்கலைக் கழக ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் திருமிகு செல்லப்பன் அவர்கள் உரையாற்றுகையில் கல்வியினை அனைவருக்கும் உரியதாக ஆக்குவதில் ஆர்வம் கொண்ட துணைவேந்தர்'' என்று பாராட்டினார்கள் பேராசிரியர் இராசாமுத்திருளாண்டி பேசும் பொழுது, ' மனித நேயங்கள் வளரக் கனவு கண்ட பாரதிதாசன் பெயரில் அமைந்த பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மனிதநேயம் உள்ளவராக அமைந்தது பெருமைக்குரியது'' என்று குறிப்பிட்டார். சமால்முகமது கல்லூரித் தமிழ்த் துறைப் பேராசிரியர் சாத்தையா அவர்கள், ''தமிழுக்கென்றே இருக்கும் சங்கமும், கல்லூரியும் துணைவேந்தரை வாழ்த்துவது தமிழ்த் தாயே வாழ்த்துவதுபோலத் தம்மால் உணரமுடிகின்றது'' என்றார். குறிப்பிட்ட காலத்தில் வினாக்கள் தயாரிக்கப்பட்டு, தேர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறுவதும், தேவையான பாடப் புத்தகங்கள், கல்லூரியின் தொடக்க காலங்களில் கிடைக்க ஏற்பாடு

செய்வதும், துணைவேந்தர் அவர்கள் கல்வி வளர்ச்சியில் கொண்ட ஆர்வத்தினைச் சுட்டுகின்றன'' என்று இவர் மேலும் தமது உரையில் குறிப்பிட்டார்.

பாராட்டுரைகளுக்கு ஏற்புரை வழங்கிய துணைவேந்தர் அவர்கள், வெவ்வேறு கல்லூரி முதல்வர்கள் உணர்ச்சி பூர்வமாக வெளியிட்ட உரைகளால் தாம் அவர்களது அன்பினை உணர்ந்ததாகக் குறிப்பிட்டார்கள். தம்மீது பொழியப்பட்ட பாராட்டுரைகள் தம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தின'' என்றும் மனநிறைவுடன் கூறினார்கள். இந்த கரந்தைப் புலவர் கல்லூரியில் அடுத்த ஆண்டு எம். ஃபில்., பிஎச். டி., ஆகிய பட்ட ஆய்வு வகுப்புகள் தொடங்கப் பெறுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பெற வேண்டுமென்று மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவதில் பல்கலைக் கழகம் மிகவும் ஆர்வம் கொண்டிருக்கிறது என்றும் துணைவேந்தர் அவர்கள் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

கரந்தைப் புலவர் கல்லூரியின் துணைமுதல்வர் பேராசிரியர் திருமிகு ஆ. பாலன் அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

துணைவேந்தர் அவர்களுக்குச் சிறப்பாகக் கொடுக்கப்பட்ட பாராட்டுவிழா நடைபெற்ற அதே நாள் மாலையில் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்க நிறைவேற்றுக் கழக உறுப்பினர் திரு. ச. இராமநாதன், ஓய்வு பெற்ற கரந்தைப் புலவர் கல்லூரியின் முன்னாள் துணைமுதல்வர் பேராசிரியர் ச. பாலசுந்தரம், ஓய்வுபெற்ற உமாமகேசுவரர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. பா. நடராசன், ஓய்வு பெற்ற இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. கௌரி சங்கர் ஆகியோர்க்கும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரால் பாராட்டு விழா நடத்தப்பெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திருமிகு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் தலைமையேற்று அரியதொரு கருத்துரையாற்றினார். கரந்தைப் புலவர் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் பி. விருத்தாசலம், உமாமகேசுவரா மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திருமிகு தே கண்ணன், இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் புலவர் சிவ பாலசுப்பிரமணியன், கரந்தைப் புலவர் கல்லூரித் துணைமுதல்வர் திருமிகு அ. பாலன், தமிழவேள் அவர்களின் கனவை நனவாக்கும் வகையிலே கண் துஞ்சாது, மெய்வருத்தம் பாராது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகின்ற நிறை

வேற்றுக் கழக உறுப்பினர்கள் திருமிகு பா. பரமசிவம்பிள்ளை, திருமிகு இரா. நாகராசபிள்ளை, திருமிகு கி. சந்திரமோகன் ஆகியோர்களும் கரந்தைத் தமிழ்ச் சங்க கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியையே தனது வளர்ச்சியெனக் கருதி இடையறாது உழைத்து வரும் கரந்தைப் புலவர் கல்லூரியின் செயலாளர் திருமிகு ச. சுந்தரம் பி. ஏ., பி எல்., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பாராட்டுப் பெற்ற திருமிகு ச. இராமநாதன், பேராசிரியர் ச. பாலசுந்தரம், திரு கே. கௌரிசங்கர், திரு. பா. நடராசன் ஆகியோர் ஏற்புரை வழங்கிய பின்னர்க் கரந்தைத் தமிழ்ச் சங்க நிறைவேற்றுக் கழக உறுப்பினர் திருமிகு நா. லெ. சி. தீனதயாளு அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுபெற்றது

11—10—1982 திங்கட் கிழமையன்று, கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் அவர்கள் தம் வரவேற்புரையில், ''வாழ்நாள் முழுவதும் தமிழுக்கெனவே தொண்டு செய்த தமிழ்ச் சான்றோர்களான திரு. வி. க., பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் ஆகியோர்களின் நூற்றாண்டு விழாவாக இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 44-ஆம் ஆண்டுத் தொடக்கவிழா நடைபெறுவது சாலப் பொருத்தம்'' என்று குறிப்பிட்டார்.கள் மாணவியர் தலைவி திருமதி லூ. டோரா அவர்களால் இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் அறிக்கை படிக்கப் பெற்றது. தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரப்புகின்ற பணியைச் செய்துவரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் வணக்கத்திற்குரிய பேராசிரியர் முனைவர் வ. அய். சுப்பிரமணியம், எம். ஏ., பிஎச். டி., அவர்கள் அவ்விழாவிற்குத் தலைமை ஏற்று தமிழ்ச் சான்றோர்களைப் பற்றிய அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். திருவையாறு அரசர் கல்லூரிப் பேராசிரியர் திருமிகு க. கலியபெருமாள், எம். ஏ., அவர்கள் இலக்கிய மன்றத் தொடக்கவிழாப் பேருரை நிகழ்த்தினார்கள். ''தமிழ்த் தென்றல் திரு. வி. க.வின் தமிழ்த் தொண்டு'' என்னும் பொருளில் உரையாற்றிய திருமிகு புலவர் தொல்காப்பியன் எம். ஏ., அவர்கள் பத்திரிக்கைகள் வாயிலாக, தொழிற் சங்கங்களின் வாயிலாக, மேடைப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ்த் தென்றல் திரு வி. க அவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டுகளைப் பற்றி விளக்கிக் கூறினார்கள். பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரின் தமிழ்த் தொண்டுகளைப் பற்றிப் பூண்டி புட்பம் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் திருமிகு வே. காத்தையன், எம். ஏ., அவர்கள் சொற்பெருக்காற்றினார்கள். மாணவர் தலைவர் திரு. மோ. அந்தோனிராசு அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

இவ்வாறு 1982 அக்டோபர் 10, 11 ஆகிய இரண்டு நாட்களிலும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் இடையறாத தமிழ்த் தொண்டுகளை நாட்டுக்கு அறிவிக்கும் நல்ல நிகழ்ச்சிகளாக விளங்கின. ×

---

## அத் தலைநாள் போலும்!

இரவுக் குறியிடத்தே தலைவனுடன் தலைவி சந்தித்துக் களவாகக் கூடி மகிழ்ந்து வருகின்ற காலத்தே ஒருநாள் அவன் வந்து ஒரு பக்கமாக ஒதுங்கியிருக்க, அவள் தன் தோழியிடத்தே,

''நிறம் விளங்கிய களிறானது, தன் இனத்துடன் கூடியதாக, முளைகள் வளர்ந்திருக்கும் தூறுகளிலேயுள்ள மூங்கில்களை ஒடித்துத் தின்றபின், நீர் வேட்கையுடையதாய்த் துறையிடத்தே செல்லும். அவ்விடத்தே, தன் உருவினைப் பார்த்துத் தன்னைத் தாக்குவதன் பொருட்டாகப் பதுங்கிய, போரிடும் மாறுபாட்டைக் கொண்ட புலியினைப் பொருது, அது கொல்லும். கொன்றபின் கூர்மையான முனையிலே குருதி தோய்ந்து செந்நிறமாயுள்ள தன் கொம்பினை, மிக்க மழையிலே கழுவிக் கொண்டதாகக், கல் முனைகளையுடைய மலைச் சாரலிடத்தே மெல்லமெல்லச் செல்லும். கொற்றங் கொண்ட தன் பகையினைக் கொன்றழித்த ஆண்மையுடனே மதங்கொண்டதாகி, அம் மதநீரிடத்தே யாழொலி போல இசைக்கும் அறுகாற் பறவையான வண்டினம் மொய்த்து ஆரவாரிக்கச் சென்று அது தன் பிடியுடனே கூடி இன்புறும். அங்ஙனம் இன்புற்றதாக, அது வாழை மரங்களையுடைய மலையிடத்தே உறங்கியிருக்கும். அத்தகைய நாட்டிற்கு உரியவன் நம் தலைவனாவான்.

'அவன்' நின்னுடைய உயர்விற்குத் தகுதியான தன்மையன்' என, நீ அன்பினாலே உரைத்து, என் உள்ளம் அமைதி கொள்ளும்படியாகக் கூறிய இனிதான சொற்கள் எல்லாம் இந்நாள் வாய்மையே ஆயின. விரும்பியவருக்குப் அமுதத்தைப் போன்றதாக விளங்கும் இனிய மணங் கமழுகின்ற தாரினையுடைய அவன் மார்பிடத்தே, வண்டும் இடையிலே பொருந்தாத செறிவுற்ற முயக்கமும், அவன்பேரிற் கொண்ட நீங்காத காதலும், முதலில் அவனோடு கூடிய அத்தலை நாளினைப் போன்றே என்றும் சிறவா நின்றன. தோழி! நீ வாழ்வாயாக!''

எனத் தான் அவனிடத்துக் கொண்ட காதலை உரைப்பாள்போலச் சொல்லுகின்றாள். இதனைக் கேட்கும் அவன், விரைவிலேயே தலைவியை மணந்து அவளுடன் பிரிவற்ற இன்ப வாழ்விலே திளைப்பதனை நாடுவான் என்பது அவளுடைய நோக்கமாகும்.

உயிர்ப்பு:
அகம்: 332.

புனைவு:
—கா. அரசன்.

# வரலாற்று நாவல் உலகில் 'கல்கி' பெறும் இடம்†

ஆ இளங்கோவன்,
பி. லிட்., நான்காம் ஆண்டு மாணவர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,

பல்வேறு துறைகளிலும் தம் எழுத்தாற்றலால் தனக்கெனத் தனித்த ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டவரான கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பாக, வரலாற்று நாவல் துறையில் காலத்தாலும், சிறப்பாலும் முதன்மைபெற்று விளங்குகிறார். சமூக நாவல் துறையில் ராஜம் ஐயர் போன்றோருடைய நாவல்கள் கல்கியின் படைப்புகளுக்கு முன்னரே போற்றப்பட்டன. செய்தித்தாள் துறையில் டி.எஸ். சொக்கலிங்கம், எஸ் எஸ். வாசன் போன்றோருடைய தொண்டும் கல்கியின் தொண்டுடன் சீர்தூக்கிப் பார்க்கப்படும் தொண்டு. ஆனால், வரலாற்று நாவல் துறையில் கல்கியின் காலத்திற்கு முன் கல்கி எழுதியவை போன்ற வரலாற்று நாவல்கள் தோன்றவில்லை. கல்கியின் காலத்திற்குப்பின் தோன்றிய வரலாற்று நாவலாசிரியர், பெரும்பாலும் கல்கியின் மாணவர்கள் என்றே கூறுதல் வேண்டும்[1] என்பர் அறிஞர் தனிநாயகம் அடிகள்.

மேல் நாட்டில் சர். வால்டர் ஸ்காட் (Sir. Walter Scott) என்பவர் இத்துறையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வழிகாட்டினார். அவருடைய நூல்கள் பரவியதும் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ஸ்காட்டின் நூல்களை முன்மாதிரியாகக் கொண்டு, அவரைப் போலவே வரலாற்றுப் புனைகதை நூல்களை எழுதப் பலரும் முயன்றனர். என்றாலும், ஒருசில நூல்களைத் தாம் ஸ்காட்டின் நூல்களுக்கு இணையான புகழை அடைந்தன. அவற்றுள் விக்டர் கியூகோ எழுதிய 'பாரீஸ் பெரிய கோயில்'' (1821), அலசான்ட்றோ மன்சனி எழுதிய ''காதலர் இருவர்'' (1824), ஆகியவை குறிப்பிடத் தக்கவை என்பர் வில்பர் கிராஸ்2.

---

†22—12—1982-இல் நடைபெற்ற கல்லூரிக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரை

1. தனிநாயக அடிகளார், ''வரலாற்று நாவல்கள்'' எழுத்தாளர் கல்கி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, ஏப்ரல், 1966., (முதற் பதிப்பு) பக். 65.

2. L. Wilbur Cross. The Development of the English Nowel. Newyork, Macmillan, 1927, P. 125.

இறந்த காலத்தின் ஆதாரங்களைக் கொண்டு, ஆசிரியர் ஒரு நிகழ்ச்சியைப் பற்றியோ, பொருளைப் பற்றியோ தரும் விளக்கமே வரலாறு ஆகும். தம் கற்பனை ஆற்றலைப் பயன்படுத்தி இலக்கியங்கள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுக்கள், பழம் பொருள்கள் நாணயங்கள் போன்றவற்றின் துணை கொண்டு வரலாற்று ஆசிரியர் இறந்த காலத்தை ஒருவாறு உயிருள்ளதாகக் காட்டினும், வரலாற்று ஆசிரியரின் வரலாற்றுக் கற்பனைக்கும் வரலாற்று நாவல் ஆசிரியரின் கற்பனைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. வரலாற்று ஆசிரியர் வரலாற்றில் உள்ளதை உள்ளவாறு சான்றுகள் மேற்கோள்களின் அடிப்படையில் விளக்குவார். வரலாற்று நாவலாசிரியர் வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டாலும் மாந்தரையும், செய்திகளையும் நிகழ்ச்சிகளையும், பண்டைச் சொற்களையும் கொண்டு மக்கள் எவ்வாறு உண்டார்; அணிந்தார்; வழிபட்டார்; உரையாடினார்; வாழ்ந்தார் என்று எண்ணி எண்ணி உண்மையையும், கற்பனையையும் கலந்து எழுதுவார். முன்னவருடைய நோக்கம் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு விளக்க முயலுதல், பின்னவருடைய நோக்கம் நிகழ்ந்தவற்றைக் கற்பனைக் கண்ணுடன் பார்த்தல்.

வரலாற்று நாவல்களில் வரலாறு வெவ்வேறு அளவில் அமைந்துள்ளமைக்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். ஒவ்வொரு வரலாற்று நாவலிலும் கற்பனைக் கூறு எவ்வளவு, வரலாற்று உண்மை எவ்வளவு என்பதை நிறுத்துப் பார்த்தல் திறனாய்வுப் பணியாகும். கல்கியின் ''பொன்னியின் செல்வன்'' அகிலனின் ''வேங்கையின் மைந்தன்'' பார்த்தசாரதியின் ''மணி பல்லவம்'' செகசிற்பியனின் ''நாயகி நற்சோனை'' சோமுவின் ''கடல் கண்ட கனவு'' முதலிய வரலாற்று நாவல்களில் வரலாறும், கற்பனையும் வெவ்வேறு அளவில் பின்னப்பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் நாட்டில் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வளர்ந்து வந்த விடுதலை இயக்கமும், இலக்கிய மறுமலர்ச்சியும், வரலாற்று நாவல்கள் தோன்றுவதற்கு அடிப்படையான காரணங்களாக அமைந்தன. கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும், பிறவற்றையும் கொண்டு தமிழ் நாட்டின் பண்டைய வரலாற்றை, வரலாற்று வல்லுநர்கள் எழுதத் தொடங்கியதும் பல்வேறு கால கட்டங்களின் பெருமைகளையும் கல்வியிலும், கலையிலும், ஆட்சியிலும், அரசியலிலும் அக்காலத்தில் தமிழர் அடைந்திருந்த உயர்ந்த நிலைகளையும் அனைவரும் அறியும் வாய்ப்பு அமைந்தது. சங்க இலக்கியங்களும், காப்பியங்களும், பிறவும் நூல் வடிவில் பரவியதும் தம் பழைய வரலாற்றை அறிவதில் — விரிவாக

அறிவதில் தமிழர்க்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. மேலைநாட்டு, கீழை நாட்டு, நம் நாட்டு வரலாற்று அறிஞர்தம் அரும்பெரும் ஆராய்ச்சி நூல்களும் அவற்றின் வழிநூல்களும் நம் எழுத்தாளர் களுக்கு அடிப்படை ஆதாரங்களாயின.

வரலாற்று நாவல்கள் நாட்டுப் பற்று, இனப் பற்று முதலிய பற்றுகளின் காரணமாகத் தோன்றுவதுண்டு. இப்பற்றுகளை வளர்க்கும் கருவிகளாகவும் அமைவதுண்டு. கல்கியின் வரலாற்று நாவல்கள் இத்தகைய இயல்பினை உடையனவே3 என்று எல். ஜார்ஜ் தம்முடைய "The Historical Novel" என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

கல்கி வரலாற்று நாவல் துறையில் தமக்குரிய களங்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவை பல்லவர் காலமும், பிற்காலச் சோழர் காலமும் ஆகும். அவருடைய கதைகளுக்கு வேண்டிய ஆதாரங்கள், இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் பல்லவர், சோழர் காலக் கோவில்களிலும், சிலைகளிலும் சதாசிவ பண்டா ரத்தார் போன்ற வரலாற்று அறிஞர்கள் எழுதிய நூல்களிலும் பெர்சிப்புரவுன் போன்றோர் எழுதிய சிற்ப நூலகளிலும், இலங்கை முதலிய இடங்களுக்குச் சென்று வந்த பயணங்களிலும் கிடைத்தன.

கல்கி, பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னி யின் செல்வன் என்னும் மூன்று வரலாற்று நாவல்களை எழுதியுள் ளார். பார்த்திபன் கனவு அவருடைய முதல் முயற்சி. அது அள வில் சிறியதாகவும் கல்கியின் திறமையை அதிகம் வெளிப்படுத்தாத தாகவும் அமைந்துள்ளது. அதைத் தொடர்ந்து எழுதப்பட்ட சிவ காமியின் சபதம் பார்த்திபன் கனவை விட அளவில் பெரிதாகவும் கல்கியின் திறமையை உணரச் செய்ய வல்லதாகவும் அமைந்தது. இறுதியில் வெளியான பொன்னியின் செல்வன் சிவகாமியின் சப தத்தவிட அளவில் இரு மடங்காகப் பெருகியது. இது கல்கியின் முழுத் திறமையும் அறியுமாறு சிறப்பாக உள்ளது.

மேற்கண்ட மூன்று நாவல்களில் "சிவகாமியின் சபதம்" பொன்னியின்செல்வனைவிடச் சிறந்து விளங்குகிறது. பொன்னியின் செல்வன் சிவகாமியின் சபதம் ஆகிய இரண்டையும் பற்றிச் சில பொதுவான செய்திகளைக் கூறி, வரலாற்று நாவல் உலகில் கல்கி பெறும் இடம்பற்றிய எண்ணங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

---

3. Lukacs George, "The Historical Novel" Merlin Press, London, 1982.

நாவலின் கட்டுக் கோப்பில் ''சிவகாமியின் சபதம்'' பொன்னியின் செல்வனைவிடச் சிறந்து விளங்குகிறது. பொன்னியின் செல்வனின் கதை அமைப்பு சோழப் பேரரசைப் போலவே பரந்து விரிந்துள்ளது. கதைப் போக்கில் அமைந்துள்ள சிக்கலோ சுந்தர சோழனுக்கும் முதலாம் இராசராசனுக்கும் இடையிலுள்ள சோழர் வரலாறு போலவே சிக்கலாக அமைந்துள்ளது. கதையும் இந்தச் சிக்கலான காலத்தை தழுவியே அமைந்துள்ளது

சிவகாமியின் சபதத்தின் கதையோட்டத்தைவிடப் பொன்னியின் செல்வனின் கதையோட்டம் விறுவிறுப்பாக உள்ளது. ஆனால் சிவகாமியின் சபதத்தில் சிவகாமி கதைத் தலைவியாக அமைவது போல் பொன்னியின் செல்வனில் இராசராசன் கதைத் தலைவனாக அமையவில்லை. கதையைத் தொடங்கும்போதே இளமையும், துடிதுடிப்பும் நிறைந்த வல்லவரையன் வந்தியத்தேவனைக் காண்கிறோம். அவனே கதைத் தலைவனாகக் காட்சி அளிக்கின்றான். கதையின் முதற்பாகம் முழுவதும் அவனுடைய வீரச் செயலைக் கூறும் பகுதியாகவே விளங்குகிறது. அந்தப் பகுதியில் காதலும் வீரமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளனவாகக் காணப்படுகின்றன.

இரண்டாம் பாகத்தில் வீரம் அறிவோடு சேர்ந்து விளக்கம் பெறுவதுபோல் வந்தியத்தேவன் பொன்னியின் செல்வனைச் சந்தித்துக் கதைக்குப் புதுமெருகு தருகிறான். இதனால், வந்தியத்தேவனின் இளமை மிடுக்கும், தோள் வலியும், வாள் வீச்சும் விளக்கம் பெறுவதோடு, அவன் அறிவும், அனுபவமும் பெற்றுப் புது மனிதனாகத் திகழ்கின்றான். இந்த உண்மை மூன்றாம் பாகத்திலும், நான்காம் பாகத்திலும் சிறந்து ஒளிவிடுவதைக் காணலாம்.

கதையின் முதற் பாகத்தில் வந்தியத்தேவன், நந்தினியைக் கண்டபோது இருந்த மருட்சி மூன்றாம் பாகத்தில் அவளைப் பாண்டியராயன் கோட்டையில் கண்டபோது இல்லை. நந்தினியின் எல்லையற்ற பேரழகில் கந்தமாறனின் உள்ளம் ஆடியது — பார்த்திபேந்திரனின் மனம் மன்றாடியது — பெரிய பழுவேட்டரையரின் சித்தம சுழன்றது — கரிகாலன் இதயம் இருண்டது. அந்த அலைக்கழிக்கும் பேரழகை வென்ற பெருமைக்குரியவன் வந்தியத்தேவன் ஒருவனே. நந்தினியை வென்ற அவனே குந்தவையின் மெல்லழகில் தன்னை ஆட்படுத்திக் கொண்டான்; பண்பட்டுயர்ந்தான். கதையின் இறுதியில் தன்னைக் காதலித்துப் பிச்சியான மணிமேகலைக்கு இறக்கும் தருவாயில் அமைதி தரும் தலைவனாகவும் அவனைக் காண முடிகிறது.

சிவகாமியின் சபதத்தில் சிவகாமி என்னும் பாத்திரமே பெண் பாத்திரங்களில் ஈடு இணையில்லாப் பாத்திரமாகத் திகழ்கிறது. பொன்னியின் செல்வனில் மூன்று பெண் பாத்திரங்களைச் சிறப்பாகப் படம் பிடித்துள்ளார் கல்கி. சோழப் பேரரசினைக் கட்டிக் காக்கத் துணைபுரியும் குந்தவை, அப்பேரரசினைத் துகளாக்க வழி வகுக்கும் நந்தினி, காவல் தெய்வமான மந்தாகினி ஆகியோர் கதையினைப் படிப்போர் நெஞ்சில் நிலைப்பர். கோடிக்கரையில் ஆடித்திரியும் பூங்குழலியும், வந்தியத் தேவனைக் கண்டதும் காதல் கொண்ட பேதைப் பெண் மணிமேகலையும் குந்தவையின் உயிர்த் தோழியான வானதியும் மேற்கூறிய மூன்று பெண் பாத்திரங்களுக்கும் அடுத்து வைத்து எண்ணத் தக்கவர்கள்.

இந்த ஆறு பெண் பாத்திரங்களில் குந்தவை, நந்தினி, மணிமேகலை ஆகியோர் கதைத் தலைவனாகிய வந்தியத் தேவனைக் காதலிக்கின்றனர். குந்தவையே இதில் வெற்றி பெறுகிறாள். நந்தினி தன் ஆசைக்கு அணைபோட்டு விடுகிறாள். மணிமேகலை அந்த ஆசையில் தன்னையே கரைத்துக் கொள்ளுகிறாள்.

குந்தவை சோழப் பேரரசை உருவாக்கும் சூத்திரதாரியாக அமைகிறாள் நந்தினி சிவகாமியின் சபதத்தில் வரும் நாகநந்தி அடிகள் போல நடமாடுகிறாள். அரசியல் சூதாட்டத்தில் வெற்றி பெறும் மங்கையாகக் குந்தவையும், தோற்றோடும் நங்கையாக நந்தினியும் அமைகின்றனர். வரலாற்று நாவல் துறையின் முதல்வராகவும் குறிப்பிடத் தக்கவராகவும் விளங்குகின்ற பெருமைக்குரிய கல்கியைப் பற்றிய வேறுவேறு திறனாய்வாளர்களின் திறனாய்வுக் கண்ணோட்டங்கள் ஈண்டுக் குறிக்கத் தக்கன.

''நாவல் என்பது நெடுங்கதை என்றும், அதுவே தலையாய சிறப்பியல்பு என்றும் மனதில் வரைந்து கொண்டு கதை எழுதியவர் கல்கி. ஆனால், நாவலில் உலகானுபவத்தை ஒட்டிய நிகழ்வே முக்கியம், அது உலகானுபவத்தை ஒட்டிய உரைநடையிலே அமைதல் கூடும். இரண்டும் வேறுவேறாகப் பிரிக்க முடியாதன. அஃதாவது காவிய மரபில் கதையும் எழுதிக் கொண்டு நாவலுக்குரிய உரைநடையையும் ஏக காலத்தில் ஒருவர் எழுதுவது நடவாத காரியம். உதாரணமாக, சிவகாமியின் சபதம் கல்கியின் மகத்தான தொடர் நவீனம். அதிலே சிவகாமியைச் சீதையின் சாயலில் படைக்க முயன்றிருக்கிறார். இது தவிர்க்க முடியாதபடி சீதைக்கு வெற்றியாகவும் சிவகாமிக்குத் தோல்வியாகவும் அமைகிறது. பாத்திர வார்ப்பிலே காவிய நடை தலையிடுவது போலவே நாட்டு நகர வருணனை முதலியவற்றிலும் காவிய நெறியைக்

காணலாம். பழைய காவிய மாதிரி போதாது என்று, மேனாட்டு வீரதீரக் கதைகளையும் சாதுரியமாகப் பயன்படுத்தினார் கல்கி.''4 என்று கல்கியைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார் டாக்டர் கைலாசபதி.

''சிவகாமியின் சபதத்தில் வரும் மகேந்திரவர்ம பல்லவர் பழந் தமிழ் உடையணிந்த பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கிலத் துப்பறியும் சிங்கத்தையே'' நினைவூட்டுகிறார்'' என்று திரு. சிதம்பர ரகுநாதன் கூறியுள்ளதும் இங்குச் சுட்டத்தக்கது.

புதுமையும் சிருஷ்டித் திறனுமற்ற ஓர் உரைநடையைக் கருவியாகக் கொண்டு மாமூலான அடிக் கருத்துக்களை (Themes) கதைப் புணர்ப்பிலே பயன்படுத்திப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப் படும் சராசரித் தமிழ் மரியாதையான குடும்பங்களில் இல்லத்தோடு படிக்கத் தக்க கதைகளை எழுதினார் கல்கி.

''பாத்திர வார்ப்பில் நாட்டமும் நம்பத் தகுந்த உரையாடலில் ஆர்வமும் எள்ளளவும் தமக்கு இல்லையென்பதை அவர் வெளிப் படுத்திக் கொள்கிறார்''5 இவை கல்கியைப் பற்றி டாக்டர் கைலாசபதியின் படப்பிடிப்புகள்.

''(கல்கி) ... ... வடுவூரார், ஆரணி மூதலியோர் பண்ணிய கைங்கரியத்தையே இன்னும் சற்றுத் தொடர்ந்து விடாப்பிடியாகப் பத்திரிகையுகத்தில் வெற்றியுடன் செய்தார். அவரைப் படிக்க இனிப்பது எவ்வளவோ உண்மை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் நல்ல கலைஞன் தன் இலக்கியத்திற்கு விஷயமாக எடுத்துக் கையாளக் கூடிய விஷயங்களைஎல்லாம் ஒதுக்கிவிட்டு நகர்ந்து விடுகிறான்.

''அவர் எழுதியதிலே அவருடையது எது? மற்றவருடையது, சிறப்பாக டூமாஸ், லீய்னுட்டு மெர்ரச், லிட்டன் இவர்களுடையது எது? என்று தீர்மானிப்பது சிரமம்.''6 இவை திரு. க. நா. சுப்ர மணியத்தின் கல்கி பற்றிய கணிப்பு.

---

4. க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை, ஜனவரி, 1968 (முதல் பதிப்பு), பக். 51.

5. மேற்படி, பக். 98.

6. க. நா. சுப்பிரமணியம், இலக்கிய விசாரம், சென்னை, (1969), பக். 29-30.

இதுவரையில் கண்ட திருவாளர்கள் சிதம்பர ரகுநாதன், க. நா. சுப்ரமணியம், டாக்டர் கைலாசபதி முதலியோரின் திறனாய்வுக் கருத்துக்கள் கல்கியைப் பற்றிய எதிர்மறைச் சிந்தனைகளைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன. கல்கியைப் பற்றிய தொரு மாறுபட்ட கண்ணோட்டத்தை அவை வழங்கியுள்ளன. தமிழ் நாவல் உலகில் குறிப்பாக, வரலாற்று நாவல் உலகில் கல்கி ஒரு திருப்பு முனை என்ற நம்பிக்கையைத் திசை திருப்புவதுபோல அவர்களுடைய கருத்துக்கள் அமைந்துள்ளன. என்றாலும், அவர்களே குறிப்பிட்டுள்ளதுபோல் ''மரியாதையான இல்லங்களில் குடும்பத்தோடு படிக்கத்தக்க கதைகளை எழுதியவர் கல்கி, அவரை (கல்கி) படிக்க இனிப்பது என்னவோ - உண்மையென்றுதான் சொல்ல வேண்டும்.

மகேந்திரவர்மர், நரசிம்மவர்மர், நாகநந்தி அடிகள், வந்தியத்தேவன், ஆதித்த கரிகாலன், பெரிய–சிறிய பழுவேட்டரையர்கள் ஆழ்வார்க்கடியான் நம்பி, நந்தினி, குந்தவை ஆகிய பாத்திரப் படைப்புகள், சிவகாமியின் சபதத்தையும், பொன்னியின் செல்வனையும் படிப்பவர்கள் நெஞ்சங்களில் உயிர்ப் பாத்திரங்களாகக் காலம் காலமாக நின்று நிலவும் தனித்துவம் மிக்கவை.

''முன்னம் அவனுடை நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்''

என்று தொடங்கும் அப்பர் பெருமானின் திருப்பாடலைக் கேட்கும் போது எல்லாம் நெஞ்சில் சிவகாமியின் பாதச் சிலம்பொலியும், மனக் கண்ணில் அவளுடைய துயரம் தோய்ந்த கண்ணிரண்டும் தோன்றி, நம்மைக் கலங்க வைக்கு. கடைசிநாள் வரையிலும்,

''புன்னைமரச் சோலையிலே
பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லிஅவர்
கன்னல்மொழி பகர்ந்ததெல்லாம்
சொப்பனந்தா னோடிஅந்த
அற்புதம் பொய்யோடி''

என்னும் பாடல் வரிகள் செவியில் வந்து மோதும் போதெல்லாம், கிள்ளை மொழியும் தூய மனமும் நெஞ்சு நிறைந்த மெய்யான காதலுமாக வலம்வந்து கொண்டிருந்த மணிமேகலையின் நினைவு நம்முள் கிளர்ந்து உணர்வுகளை உலுக்கும் இறுதிநாள் வரையிலும் கல்கியின் திருப்பெயருக்கு மூப்பில்லை, அழிவில்லை.

—(நிறைவு)—

## பயன்படுத்திய நூல்கள்:


### தமிழ்

(1) எழுத்தாளர் கல்கி,
பதிப்பாசிரியர் க. பொ. இரத்தினம்,
பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,
1966 (முதற் பதிப்பு).

(2) தமிழ் நாவல் இலக்கியம்,
க. கைலாசபதி,
பாரி நிலையம், சென்னை,
1968 (முதற் பதிப்பு).

(3) தமிழ் நாவல் — நூருண்டு வரலாறும் வளர்ச்சியும்,
சிட்டி, சிவபாத சுந்தரம்,
கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை.
1977 (முதற் பதிப்பு).

(4) இலக்கிய விசாரம்,
க. நா. சுப்ரமணியம்,
சென்னை , 1959.

(5) பொன்னியின் செல்வன்,
கல்கி,
மங்கள நூலகம், சென்னை, 1971.

(6) சிவகாமியின் சபதம்,
கல்கி,
மங்கள நூலகம், சென்னை.

(7) பார்த்திபன் கனவு,
கல்கி,
மங்கள நூலகம், சென்னை.

### English

(1) The Historical Novel,
L. George.
Merlin Press, London, 1962.

(2) The Development of the English Novel,
L. Wilbur Croas,
Macmillan, Newyork, 1927


—(((o)))—

# ஆந்திர நாட்டு அகநானூறு — ஓர் ஒப்பாய்வு

—டாக்டர் சரளா ராசகோபாலன்,
எம். ஏ., பி. எஃசி.,

1. 1. கி. மு. முதல் நூற்றுண்டில் ஆந்திர நாடாண்ட சாதவாகன மன்னன் ஆளனுல் எழுநூறு அகப்பாடல்கள் தொகுக்கப் பட்டன. இவை மிகுந்த சொற்சுவையும் பொருள் நயமும் நிரம்பியவை. பிராகிருத மொழியில் எழுதப்பட்டவை. இந்நூலுக்குக் 'காதா சப்த சதி'[1] என்று பெயர் இந்நூலுள் நயமிக்க நானூறு பாடல்களைத் திரு. இரா. மதிவாணனுர் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார். இந்நூல் வடக்கில் நிலவிய பழங்காலக் குடும்ப வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

1. 2. காதா எனப்படும் யாப்பினுல் அமைந்த எழுநூறு பாடல்களைக் கொண்டிருப்பதனுல் இதற்குக் 'காதா சப்தசதி' என்று பெயரிடப்பட்டது. காதா என்னும் யாப்பு வடமொழிக்கு உரியது. இது முதலடி பன்னிரண்டு மாத்திரையும் இரண்டாம் அடி பதினெட்டு மாத்திரையும் மூன்ரும் அடி பன்னிரண்டு மாத் திரையும் நான்காம் அடி பதினைந்து மாத்திரையும் அமையப் பாடப்படுவது.

1. 3. இந்நூலைத் தொகுப்பித்த ஆந்திர அரசன் ஆளன், ஐதராபாத்துக்குத் தென்மேற்கிலிருந்த குந்தளநாட்டை யாண்ட சாதவாகன மரபைச் சார்ந்த முப்பது மன்னர்களில் பதினேழாவது வேந்தன். இம்மன்னன் காலத்தில் இலட்சம் பாடல்கள் கிடைத் தன என்றும் அவற்றுக்குக் 'காதா கோடி' என்ற பெயரிருந்தது என்றும் அவற்றுள் மிகவும் சுவையான எழுநூறு பாடல்களை மட்டுமே அவன் தொகுத்தான் கூறப்படுகிறது. அவற்றுள் நாற் பத்து நான்கு பாடல்கள் இம்மன்னனுல் இயற்றப்பட்டவை.

'ஆட்யராசன் (சாதவாகனனுன ஆளன்) நாட்டில் பிராகிருதம் தெரியாதவரும், சாகசாங்கன் (விக்கிரமாதித்தன்) நாட்டில் சமற் கிருதம் தெரியாதவரும் இல்லை' என்று கூறப்பட்டுள்ளது. பிரா கிருதம் மக்களின் பேச்சு மொழியாக இருந்ததால், மக்கள் தம்தாய் மொழியை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டபோது, மன்னன் அதற்கு முழு ஆதரவைத் தந்திருக்கிறுன் என்பதற்கு இந்நூலே சான்ருகிறது.

---

1. காதாசப்த கதி — 700 பாடல்கள்

ஹர்ஷவர்த்தனின் அவைக்களப் புலவனுன பாணன் தான் இயற்றிய ஹர்ஷ சரிதத்தில் இம்மன்னன் அகப்பாடல்களைத் தொகுப்பித்த செயலை, ''அரசர்கள் ஒளிமிக்க மணிகளையும் விலை மிகுந்த அணிகலன்களையும் கருவூலத்தில் விரும்பிச்சேர்த்து வைப்பதுபோல, சாதவாகன மன்னன் ஆலன் என்றும் அழியாத அகப்பாடல்களைத் தொகுத்து வைத்திருக்கிருன்'' என்று பாராட்டுகிருர்.

ஆளனல் ஆதரிக்கப்பட்ட 'பாலிதன்' என்ற புலவரே அரசனின் ஏவலால் எழுநூறு பாடல்களைத் தொகுத்ததாகவும் தெரிகிறது.

ஆளனுக்கு முன்பு வாழ்ந்த பெரும் புலவர்கள் இருநூற்று அறுபத்தொரு பேர். இவர்களில் எழுவர் மகளிர். எழுநூறு பாடல்களில் முந்நூற்று நாற்பது பாடல்களுக்கு மட்டும் ஆசிரியர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

1.4. காதா சப்தசதிக்குப் புகழ்மாலை சூட்டிய பிராகிருதப் புலவர் ஒருவர் காதா சப்தசதியைப் படிக்காதவர்கள் காதலின் இயல்பையும், காமத்தின் நலனையும் பற்றிப் பேசுவது (அவர்கள் எத்துணைச் சிறந்த காமநூலைக் கற்றவராயினும்) நாணத்தக்கதாகும் என்கிருர்.

இந்நூல் பிற்காலத்தில் ஆந்திரர்களால் பெரிதும் மதிக்கப்பட்டது. அதன் விளைவாக, பெதகோமுடி வேமன்னனின் அமைச்சன். மாமிடி சிங்கண்ணனின் தம்பி பிரகடனுக்கு 'சாலவாகன சப்தசதி' என்று பெயரிட்டிருக்கிருன்.

இந்நூலைப் போலவே, 'அமருகன்' என்பவர் 'அமருக சதகம்' என்னும் பெயரில் வடமொழியில் எழுதினர். அதன்பிறகு கோவர்தனச்சாரியார் 'ஆர்யா சப்த சதி' என்னும் பெயரில் எழுநூறு பாடல்களையும் வடமொழியில் எழுதினர். விகாரிலால் மிசுரா என்பவர் விராசமொழியில் (Vraj Bhasa) 'விகாரி சதசயி' என்னும் பெயரில் மொழி பெயர்த்தார். செருமானிய மொழியில் இந்நூல் 'வீபர்' என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுப் பல பதிப்புகளாக வெளிவந்த பெருமைக்குரியது.

1.5. இந்நூலுக்கு முதன் முதலில் 'குலபால தேவன்' என்பவர் உரை எழுதினர். அவருக்குப் பின் கங்காதரப்பட்டு, மதுரநாத சாஸ்திரி ஆகியோர் உரையெழுதினர். உரையாசிரியர்களின்

கூற்றிலிருந்து இதற்குச் 'சாலிவாகன சப்தசதி' என்று வேறு பெயரிருந்ததாகவும் தெரிகிறது.

1. 6. வடஇந்திய மொழிகளுக்குத் தாயான பிராகிருதம் பல வகைகளில் தமிழோடு ஒப்புமையுள்ளதாக இருக்கிறது. இந்நூலில் திணையும் துறையும் வகுக்கப்படவில்லையே யொழிய மற்றபடி பாடல்கள் பெரும்பாலும் தமிழிலக்கிய அகத்துறை நெறிகளையே தழுவியுள்ளன என்பது நன்கு தெளிவாகிறது.

அக்கால ஆந்திர மன்னர்க்குக் கிழக்கே வங்கக் கடலும் மேற்கே அரபிக் கடலும் எல்லைகளாகக் கூறப்பட்டிருப்பதால் இவர்களின் தலைமுறைக்குச் சில நூற்றுண்டுகளுக்கு முந்திய மொழி முற்றிலும் திராவிட மொழியாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அதனுற்றுன் தமிழ்ப்பண்பாட்டின் கூறுகளான மாலைமனை விளக்குறுத்தல் முதல் உடன்கட்டை ஏறுதல் (ஆஞ்சிக் காஞ்சி) வரை பல இயல்புகள் பிராகிருத மொழி பேசிய மக்களிடை காணப்படுகின்றன.

## 2. குறிஞ்சி

இத்திணையில் நூற்று ஒரு பாடல்கள் உள்ளன. சங்க இலக்கியக் குறிஞ்சி திணைக்குரிய துறைகள் இங்கும் காணப்படுகின்றன. ஆனல் துறைகளில் காணப்படும் உத்திகள்தான் மாறுபடுகின்றன.

2. 1. சங்க இலக்கியம், தலைவி, தலைவன்பால் காதல் கொண்ட பிறகே தோழி தலைவிக்குத் துணைபுரிவதாகக் காட்டும். ஆனல் பிராகிருதத் தோழியோ, தலைவனைக் காதலிக்கத் தலைவியைத் தூண்டுகிருள். அவரைப் பற்றிக் கேட்ட அளவிலேயே வியந்துபோய் நிற்கிருயே; அவரை நேரில் பார்த்தால் என்ன ஆவாயோ!'' என்று தலைவனை வியந்து, தலைவியைக் காதலிக்கத் தூண்டுகிருள் தோழி (101) 'அன்புள்ள கணவனைத் தேடு' என்று அறிவுரையும் கூறுகிறாள் (61) தலைவி, தலைவனின் ஊர் முதலியவற்றைப் பற்றித் தோழியிடம் கேட்கும்போதும், தோழி,

'அறியாதவளே'
அவருடைய வரலாற்றை
எதற்காகக் கேட்க வேண்டும்?
உனக்கு வெட்கமாக இல்லை!
அவரைப் பற்றி
எதுவும் கேட்டறியத் தேவையில்லை.
மருவச் செடியின்

எந்தப் பூ பகுதிக்கு
மணம் இல்லாமல் இருக்கிறது? (81)

என்று தலைவியின் ஆவலை அடக்குமுகமாகத் தலைவனைப் புகழ்கிருள்

2. 2. தமிழ் இலக்கியத்தில் தலைவன் தலைவியைக் காதலிப்பது பாங்கனைத் தவிர (தலைவன் பக்கத்தில்) வேறு யாருக்கும் தெரியாது. இந்நூலில் அறவோரே, தலைவனிடம் உள்ளூர் உழவனின் மகள் கடைக்கணித்து நோக்குவதையும் உயிரினும் மேலாகக் கருதுவதையும் கொண்டு, நீ ஏன் பெரியவர்களிடம் கூருமல் இருக்கிருய்?''[26] என்று வினவி அவனை மணவினைக்குத் தூண்டுகின்றனர்.

2. 3. சங்க இலக்கியத் தலைவி தன் காதலைத் தானே நெருங்கிய தோழியிடமும் கூருள். தோழியே அதனை உய்த்துணர்வாள். பிராகிருதத் தலைவி தன் காதலைத் தானே அத்தையிடமும் [53] மாமியிடமும் [13] கூறுகிருள். அதன் விளைவாக அத்தை தலைவியை இற்செறிக்கும் நிலையும் காணப்படுகிறது. [86]

2. 4. சங்கத் தலைவன் தலைவியின் பேரழகால் கவரப்பட்டுக் காதலில் வீழ்கிருன். ஆனல், இத்தலைவன் தலைவியைக் காதலிக்கும் காரணம் புதுமையானது. ''கமழும் நறுமணத்தாலும், மொழியும் இன்சொற்களாலும் அவனைத் தலைவி கவரவில்லை. ஆனல் புகையும் சினத்தாலும், பெருமிதமான புறக்கணிப்பாலும் தன் கற்பின் கனலைக்காட்டி உள்ளம் கவர்ந்ததாகக் கருதப்படுகிறது. [71]

2. 5. தலைவன் தலைவியை ஒத்த நிலையினராக, உயர் பண்பினராகக் காட்டுதல் சங்க இலக்கிய மரபு. [தொல். களவு: 2] ஆனல் இத்தலைவியோ, தலைவன் தன் உறவினரைக் கொன்றவன் என்ற ஏக்கமும் பகைமையும் வெறுப்பும் கொண்டவனாக இருந்தாலும் கூட, அந்த கள்வனின் இளமையும் வீரமும் அவனுடைய மனத்தையும் கண்ணையும் கவர்கின்றதாகக் கூறப்படுகிறது [95]

2. 6. சங்க இலக்கியத் தோழி, தலைவியின் காதலைக் குறிப்பாக அறிவாள். [தொல். களவு 23: 1-6] ஆனல் இத்தோழி அதனை அறியும் முறை சற்று வேறுபடுகிறது.

(தொடரும்)

தமிழ் வாழ்க!

# தமிழ்ப் பொழில்

## கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்களிதழ்


துணர்: ௫௬

திருவள்ளுவர் யாண்டு-௨௲௰௩-௰௪
**துந்துபி-ஆண்டு**
**1982-'83**

மலர்: ௧—௰௨


## உள்ளுறை அடங்கல்


01 அறிஞரை மயக்கிய ஐகாரம், ஔகாரம் [3] 122
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

02 அறிவியல் ஒரு விளக்கம் [5] 193
முனைவர் ப. க. பொன்னுசாமி,
எம். எஃசி., பிஎச். டி.,

03 அழன் [4] 175
பெ. சுயம்பு

04 ஆந்திர நாட்டு அகநானூறு —
ஓர் ஒப்பாய்வு [12] 567
டாக்டர் சரளா ராசகோபாலன், எம். ஏ., பி. எஃசி.,

05 ஆயிரத்தில் ஒருவருக்காய் அமைந்த
அழகிய தான்தோன்றி மாடம் [10] 469
இரா. கலைக்கோவன், எம். பி. பி. எஃசு., டி. ஓ.,

06 இதழ் உரிமை விளக்கம் [1] 48
தமிழ்ப் பொழில் பற்றிய அறிக்கை

07 இந்திய நாகரிகத்திற்குத்
தமிழகம் வழங்கியவை [11] 477
முனைவர் க. த. திருநாவுக்கரசு

08 உயர் எண்ணங்கள் [6] 241
பெரியார் ஈ. வெ. இரா.

09 உரிச் சொல்லும்
பல பொருள் ஒரு சொல்லும் [7] 324
முனைவர் ஆதித்தன்

10 உலா இலக்கிய மகளிர் — ஓர் ஆய்வு [4] 189
அரங்க. நலங்கிள்ளி

11 எது எழுத்து [5] 210
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

12 ஏடும் எழுத்தும் ]5] 223
புலவர் மு. சண்முகம் பிள்ளை

13 ஐந்திணை ஐம்பது
ஆராய்ச்சியின் வளர்ச்சி [7] 295
வே. சந்திரா, எம். ஏ., எம். ஃபில்.,

14 ஒப்புரவு [5] 215
ந. இரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

15 கரந்தைத் தமிழ்ச் சங்க
இருநாள் விழா [12] 554
கரந்தைத் தமிழ்ச் சங்கம், கரந்தைப் புலவர் கல்லூரி

16 கலைக்கடல் வாழ்க்கை விளக்கம் [12] 536
முனைவர் இர. குழந்தைவேலு,
எம். ஏ., பி லிப். எஃசி., டிப். ஃபிரெஞ்சு..

17 கலை கலைக்காகவா?
வாழ்க்கைக்காகவா? [10] 445
மோ. அந்தோனிராசு, பி. லிட்., நா. ஆ. மாணவர்

18 காதல் தலைவியரும்
காக்கைப் பாடினோரும் [3] 104
டாக்டர் த. சு குப்புசாமி, எம். ஏ., பிஎச். டி.,

19 கீழ்க் கணக்கில்
சில புதிய இடைச் சொற்கள் [3] 113
டாக்டர் ஏ. ஆதித்தன்

20 கீழ்வாலை, செத்தவரை ஓவியங்கள் —
ஓர் ஆய்வு [9] 411
இராசு பவுன்துரை

21 குடந்தை மாநகரில்
விழிப்புணர்ச்சி மாநாடு [1] 43
அறிவியக்கப் பேரவை
22 கூடலூரர் அழகர் கோயில் [3] 97
இராசு. பவுன்துரை
23 கூடாவொழுக்கம் [2] 49
புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ,
24 சங்கத் தமிழ் வளர்த்த சான்றோர்கள் [1] 40
சிறுவை. மோகனசுந்தரம்
25 சில நினைவுப் பாடல்கள் [7] 323
திரு. அடிகளாசிரியர்
26 சொல்லாய்வில் புதிய கண்டுபிடிப்புகள் [12] 538
புலவர் நா. இராசகோபாலன்.
எம். ஏ., பி· லிப். எஃசி., டிப். ஃபிரெஞ்சு
27 சோழர் கல்வெட்டில் கலைச் சொற்கள் [3] 139
கு. அழகேசன், எம். ஏ., எம். ஃபில்.,
28 தமிழில் சந்தப் பாடல்களில்
தோற்றமும் வளர்ச்சியும் [4] 171
மா. சற்குணம், எம். ஏ.,
29 தமிழ்ச் சொற்களில் தத்துவம் [7] 332
ந. இரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்..
30 தலைமைப் பேருரை [1] 5
தமிழவேள் த. வே. உ.
31 தமிழ்த் தென்றல்
திரு. வி. க. நூற்றாண்டு விழா அறிக்கை [2] 74
சென்னை நக்கீரர் கழகத்தினர்
32 தமிழ் நிகண்டுகள் —
ஒரு மேல் நோக்கு [7] 289
மா. சற்குணம், எம். ஏ,
33 திருமருகல் [6] 283
டாக்டர் இரா. கலைக்கோவன், எம். பி. பி. எஃசு., டி. ஓ.
34 திறனாய்வுக் கலை [2] 77
பேரா. சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ, எம். ஃபில்.,
35 தேன் [6] 270
பி. பெ. சுயம்பு

36 தொல்காப்பியத்தில் — கலைகள் [10] 433
கு. சிவஞானம். எம். ஏ.,

37 தொல்காப்பியர் கூறும்
தமிழ் எழுத்துக்களின் குறியீட்டு விளக்கம் [1] 26
பாவலரேறு ச. பாலசுந்தரம்

38 நாவல் உரைநடைக் காப்பியம்
என்பது பொருந்துமா? [11] 509
வீ. லியாரோஸ்மாலா, பி. லிட்., நா. ஆ. மாணவர்.

39 நாகா-ஊரும்-பட்டினமும் [6] 260
பேரா. சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்,

40 நாட்டுப் பாடல்கள்
ஒரு கண்ணோட்டம் [7] 300
கு. பிரேமாவதி, எம். ஏ.,

41 43-ஆம் ஆண்டு நிறைவு விழா [2] 89
இளங்கோவடிகள் தமிழ்க் கழகம், க. பு. கல்லூரி

42 நூன்மரபு—இயல் விளக்கம் [3] 117
திருமங்கலம் வை. தங்கமணி

43 பஞ்ச தந்திரக் கதை — ஓர் ஆய்வு [11] 513
அ. மு. சத்தியமூர்த்தி

44 பயிலுக நாளும் [6] 266
புலவர் ஆ. வெ. இராமசாமி

45 பாரதியாரின் காப்பிய உணர்வு [9] 427
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

46 பாரதி குழந்தை — கண்ணம்மா [7] 318
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

47 பாஞ்சாலி சபதம் [10] 460
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

48 பாஞ்சாலி சபதம் — ஆய்வு [12] 541
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

49 பாரதி தரிசனம் [7] 305
மா. ரா. அரசு

50 பாரதியின் நாடகப் படைப்புகள் [1] 36
முனைவர் ஏ. என். பெருமாள்

51 பாரதி பரம ஞானி [4, 6.] 160, 252
கே. சோமசுந்தரம் பி. ஏ , பி. எல் ,

52 பாரதியாரின் பாடல் ஒன்று – ஆய்வு [12] 523
திரு. அடிகளாசிரியர்

53 பாரதி பாடிய பிரபந்தங்கள் [9] 389
நெல்லை சொக்கலிங்கம், எம். ஏ., டி. ஜி. டி.,

54 பாரதி மொழி பெயர்ப்பாளர் [8] 337
இராசு. பவுன்துரை

55 பீடன்று [8] 337
சொ. சண்முகானந்தம் (பாரதிப் பித்தன்)

56 புதியதோர் உலகம் செய்வோம் [1] 2
புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.,

57 புரட்சிக் கவிஞரின் இருண்ட வீடு [11] 522
இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிப். எஃசி; பி. எல்; டி. எச். இடி;

58 புத்தரைப் புரிந்து கொள்வோம் [12] 60
மா. ரா. அரசு, எம். ஏ;

59 புலங் காணாப்
புதுக் கல்வெட்டுக்கள் [8,9,10] 357, 422, 441
பேரா. சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ; எம். ஃபில்;

60 பூம்புகாரும்–புதை பொருள் ஆய்வுகளும் [8] 370
மோ. அந்தோனிராசு, பி. லிட்; நா. ஆ. மாணவர்

61 பெரிய குளத்துக் கல்வெட்டில்
மேல் நெடுங்கள நாடு [5] 206
புலவர் து. இராசகோபால்

62 பெரிய குளத்துக் கல்வெட்டில்
மேல் நெடுங்கள நாடு . நெடுங்குள நாடு [11] 526
புலவர் து. இராசகோபால்

3 மருத்துவச் சுவடிகளில் நிறங்கள் [9] 376
த. அழகப்பராசு

64 மரந்தை மகளிர் [10] 454
க. சுப்பிரமணியன், எம். ஏ;

65 வ. உ. சி.யின் இலக்கியப் பணிகள் [4] 145
மா. ரா. அரசு, எம். ஏ;

67 வள்ளுவர் காட்டும்
மன நலமும் வினை நலமும் [7] 313
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
66 வ. சு. பிள்ளை மறைவிரங்கல் [11] 525
பதிப்பாசிரியர் குழு
68 வரலாற்று நாவல் உலகில்
கல்கி பெறும் இடம் [12] 559
ஆ. இளங்கோவன், பி. லிட்; நா. ஆ. மாணவர்
69 வரலாறு பற்றிய அறிக்கை [2] 87
இ. சு. முத்துசாமி, எம். ஏ; பிஎச். டி; பி. சி. எல்; பி டி;
70 வண்ணப்பா யாப்பில்
எழுத்தும் சந்தமும் [9] 403
முனைவர் கவிஞர் கு. மோகனராசு
71 வாழ்க! துந்துபி வருக! [1] 1
பாவலரேறு புலவர் ச. பாலசுந்தரம்
72 விடுக்கும் செய்தி [2] 83
பழ. த. சுப்பையன்
73 வினா விடை [2, 3, 4, 5, 6, 7, 9, 10]
94, 139, 180, 278, 277, 329, 432, 475
74 வெண்பாப் பரிசுப் போட்டி முடிவு [2, 3, 4, 5]
64, 136, 182, 233
75 வேண்டுகோள் [1] 46
த. வே. உ. நினைவுக் கழகம்

———((o))———

**பதிப்பாசிரியர் குழு:**

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேரா. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
367, மேல அரச விதி, தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
கரந்தை, தஞ்சாவூர்-2.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்-2.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்** பி. ஏ.,
அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

---

தமிழ்த்தாய் வாழ்க

**கரந்தைத் தமிழ்ச சங்கம்**

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

| | | உள் நாடு | | வெளிநாடு |
|---|---|---|---|---|
| 1. ஆண்டு வரி | ... | 20—00 | ... | 030—00 |
| 2. தனி இதழ் | ... | 02—00 | | |
| 3. ஆயுள் வரி | ... | 250—00 | ... | 250—00 |

—: **சங்க உறுப்பினர்கள்** :—

| | | |
|---|---|---|
| திங்கள் வரி | ... | 000—25 |
| ஆண்டு வரி | ... | 003—00 |
| ஆயுள் வரி | ... | 100—00 |

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க!

# தமிழ்ப் பொழி[ல்]

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் [இதழ்]

எண்:

திரு. 42. திரு. பா. இறையரசன், க.மு.,
'அன்னை இல்லம்'
'அஞ்சற்றுறை இல்லம்'
அஞ்சற்றுறைக் குடியிருப்பு,
தஞ்சாவூர்-6. - 613 006.

களுக்கு

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613 002.

## விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

| | |
|---|---|
| நெல்லை வருக்கைக் கோவை | 0—12 |
| சித்தரந்தாதி | 0—12 |
| சுருதி வீணை | 0—25 |
| கவியரசு நினைவுமலர் | 1—00 |
| சிவமும் செந்தமிழும் | 0—25 |
| Garland of Tamil Poetry | 2—00 |
| கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்) | 0—50 |
| தமிழரசி குறவஞ்சி | 0—62 |
| யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர் | 50—00 |
| கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்) | 30—00 |
| மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு) | 2—00 |
| நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு) | 3—00 |
| கபிலர் ,, ,, | 4—00 |
| பிற வெளியீடுகள்: | |
| கலைக்கூத்தன் கவிதைகள் | 6—00 |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.